**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் *2024* ஆம் ஆண்டுக்கான காலி மாவட்டத்தின் நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2379 - 2024 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2024.04.05

*2379 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *898* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *907* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது *2024*, ஏப்பிறல் மாதம் *26* ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் *2024*, ஏப்பிறல் மாதம் *10* ஆந் திகதி நண்பகல் *12.00* மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
*2024*, ஆம் ஆண்டு சனவரி மாதம் *01* ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

895-B 82556-5,441 (2024/03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களூமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வயதாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, மே மாதம் 06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, மாச்சு 25.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவில் மிஹிரிபென்ன பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவில் மருதானை பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவில் பேருவளை பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவில் மக்கோனபத்த பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவில் மிஹிரிபென்ன பிரதேசத்தின் மேலதிக முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவில் தர்கா நகர் பிரதேசத்தின் மேலதிக முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | புலத்சிங்கள | பஸ்துன் கோறளை கிழக்கு பிரிவில் வெயன்கல்லை பிரதேசத்தின் மேலதிக முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பாளிந்த நுவர | பஸ்துன் கோறளை கிழக்கு பிரிவில் பெலென பிரதேசத்தின் மேலதிக முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவில் தொடவத்தை பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவில் எளுவிலை பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவில் ஹேனமுல்லை பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |

*04-27*

## இலங்கைப் புகையிரதத் திணைக்களம்

### மேற்பார்வை முகாமையாளர் சேவையில் அதிவிஷேட தரத்திற்கு திறமை அடிப்படையில் தரமுயர்த்துவதற்கான விண்ணப்பம் கோரல்

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமையாளர் சேவையில் அதி விஷேட தரத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் அப்பதவிகளுக்கு ஏற்புடைய வகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் நிலவிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமையாளர் (அதி விஷேட தரம்) இற்கு 2010.01.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஆட்சேர்க்கப்படுகின்ற அதி விஷேட தரத்திற்கு உரிய 1 ஆம் தர உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே காட்டப்பட்டுள்ள வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிகளுக்கு அதிவிஷேட தரத்திற்கு தரமுயர்த்தப்படுவதற்கு தேவையான அடிப்படைத் தகைமைகளை கொண்டிருக்கும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கும் அதற்கான விண்ணப்பங்களை முன்வைக்க முடியும்.

| வெற்றிடம் நிலவிய நாட்கள் | நிரந்தர பாதை பரிசோதகர் | கட்டிட பரிசோதகர் | இயக்கத்தள போமன் | இயந்திர போமன் | சமிக்ஞை மற்றும் தொலைத் தொடர்பு பரிசோதகர் |
|---|---|---|---|---|---|
| 2010.01.01 முதல் 2010.06.30 வரை | 03 | - | - | - | - |
| 2010.07.01 முதல் 2011.06.30 வரை | 06 | - | - | - | - |
| 2011.07.01 முதல் 2012.06.30 வரை | 10 | 01 | - | - | - |
| 2012.07.01 முதல் 2013.06.30 வரை | 02 | 01 | - | - | - |
| 2013.07.01 முதல் 2014.06.30 வரை | 05 | 01 | 01 | 04 | 02 |
| 2014.07.01 முதல் 2015.06.30 வரை | 02 | 01 | 04 | 01 | 01 |
| 2015.07.01 முதல் 2016.06.30 வரை | 01 | - | - | 01 | 01 |
| 2016.07.01 முதல் 2017.06.30 வரை | 03 | - | - | - | - |
| 2017.07.01 முதல் 2018.06.30 வரை | 06 | - | - | - | 01 |
| 2018.07.01 முதல் 2019.06.30 வரை | 03 | 04 | 01 | 05 | 01 |
| 2019.07.01 முதல் 2020.06.30 வரை | 04 | 04 | - | - | 02 |
| 2020.07.01 முதல் 2021.06.30 வரை | 04 | - | 03 | 01 | 01 |
| 2021.07.01 முதல் 2022.06.30 வரை | - | 01 | - | - | - |
| 2022.07.01 முதல் 2022.07.27 வரை | - | - | - | - | - |
| வெற்றிடங்களின் மொத்தம் | 49 | 13 | 09 | 12 | 09 |

**குறிப்பு**.- புகையிரத முகாமைத்துவ சேவையில் மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு இதுவரையிலும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மாத்திரம் மேற்கூறிய குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இத் தரமுயர்த்தலை வழங்குவதன் மூலம் தரமுயர்த்தப்பட்ட, 2010.01.01 ஆந் திகதி முதல் 2022.07.27 வரையான காலப்பகுதியினுள் ஓய்வுபெறல், மரணித்தல் போன்ற காரணங்களினால் ஏற்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையானது மேலே காணப்படும் குறிப்பில் உள்ளடக்கப்படவில்லை. அதனடிப்படையில் இவ்வெற்றிடங்களை நிரப்புகையில் தர முயர்த்துதல்களை வழங்கும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு ஏற்படுகின்ற வெற்றிடங்களும் இச் சந்தர்ப்பத்திலேயே நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் மேற்கூறப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைகள் மாறுபடலாம்.

1. **அனுபவம்** :

   1. ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற அதிவிஷேட தரத்திற்கு உரிய 1 ஆம் தரத்தில் (06) ஆறு வருடத்திற்கு குறையாத வண்ணம் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் காணப்படுதல் வேண்டும்.

2. **வேறு தகைமைகள்** :

   i. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தையை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.
   ii. அண்மித்த ஐந்து வருட காலத்தினுள் (05) திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (2020.01.01 ஆந் திகதிக்கு பிறகு அ. சே. ஆ. கு. சுற்றறிக்கை 1/2020 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் தண்டனை பெற்றுள்ளாரா என்பதை ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டும்.

iii. அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும் பதவியில் கடமை புரிவதற்கும் தேவையான உடல் மற்றும் உளதளவிலான தகைமைகளை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பதாரி கறித்த தகைமைகளை விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு எல்லா வகையிலும் நிறைவு செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு ஆட்சேர்த்து கொள்வதற்கான அவசியமான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படுவார். தகைமைகளை உறுதிசெய்வதன் பொருட்டு சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**3. ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறைமை :**

கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை

i. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை குழுவொன்றினால் மேற்குறிப்பிடப்பட்ட கடமைகளை கொண்ட மேற்பார்வை முகாமைத்துவ சேவையில் அனுபவம் மற்றும் திறமையினை அடிப்படையாகக் கொண்டு அச் சபையின் விதப்புரைக்கமைய நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப மேலே அறிமுக பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நியமிப்பது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

ii. ஏற்புடைய புள்ளிகளை பெற்றுக்கொள்வதற்காக நேர்முகப் பரீட்சை குழுவுக்கு அனைத்து சான்றிதழ்கள் மற்றும் அறிக்கைகளின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

iii. புள்ளி வழங்கும் நடைமுறை

| இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் மேற்பார்வை முகாமையாளர் சேவையில் அதிவிஷேட தரத்திற்கு திறமை அடிப்படையில் தரமுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகளை வழங்குவதற்கான நடைமுறை | மொத்தப் புள்ளி |
|---|---|
| சேவை மூப்பிற்காக : அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/ 2019 படி, கீழ்வருமாறு கணக்கிடப்பட வேண்டும்.<br>$\frac{\text{சேவை மூப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய புள்ளி}}{\text{அதிகமான மேலதிக முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலமுடைய உத்தியோகத்தரின் மேற்கூறிய சேவைக் காலம் (வருடங்கள்} \times 12 + \text{மாதங்கள்)}} \times$ குறித்த உத்தியோகத்தரின் மேலதிக முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் (வருடங்கள் × 12 + மாதங்கள்) | 60 |
| கவனிக்க<br>(a) ஆட்சேர்ப்புக்கான தகைமையினை பெறுகின்ற புகையிரத மேற்பார்வை முகாமையாளர் பதவியில் பூரணப்படுத்தும் திருப்திகரமான சேவைக் காலத்திற்கே புள்ளிகள் வழங்கப்படும்.<br>(b) விண்ணப்பிப்பதற்கு தேவையான குறைந்த பட்ச சேவைக் காலத்தினை விடவும் அதிக சேவைக் காலம் இருப்பின் அதற்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும் | |
| 02. திறமை தொடர்பில்<br>2.1 தொழில்சார் தகைமைகளுக்காக<br>(a) தேசிய தொழில்சார் திறமை மட்டம் 1 இற்குரிய பாடநெறிக்காக - 10<br>(b) தேசிய தொழில்சார் திறமை மட்டம் 2 இற்குரிய பாடநெறிக்காக - 20<br>(c) தேசிய தொழில்சார் திறமை மட்டம் 3 இற்குரிய பாடநெறிக்காக - 30<br>(d) தேசிய தொழில்சார் திறமை மட்டம் 4 இற்குரிய பாடநெறிக்காக - 40<br>(e) தேசிய தொழில்சார் திறமை மட்டம் 5 இற்குரிய பாடநெறிக்காக - 50<br>கவனிக்க.- மேற்கூறிய தகைமைகள் தொடர்பில் புள்ளிகள் வழங்கப்படும் பொழுது ஆட்சேர்ப்பின் போது கருத்திற்கொள்ளப்படும் தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. | 50 |

**சம்பள அளவுத்திட்டம் :**

i. 2007.08.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 (IV) இல் ரூபா 20,030-11 × 365 - 18 × 500 - 33,045 ஆகிய (MN - 7 - 2006A) சம்பள அளவுத்திட்டத்தில் 04 ஆது படி நிலையானது 2010.01.01 ஆந் திகதி தொடக்கம் 2015.12.31 ஆந் திகதி வரை உரித்துடையது.

ii. 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இல் ரூபா 41,580-11 × 755 - 18 × 1,030 - 68,425 ஆகிய (MN - 7 - 2016) சம்பள அளவுத்திட்டத்தில் 04 ஆகிய படி நிலை உரித்துடையது என்பதோடு அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறே 2016.01.01 ஆந் திகதி தொடக்கம் 2020.01.01 சம்பள கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும்.

4. **தெரிவு செய்வதற்கான நடைமுறை :**
விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பிக்கும் பதவிக்கு ஏற்புடைய நேர்முகப் பரீட்சையின் போது சேவை மூப்பு மற்றும் திறமை தொடர்பில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் அதி விஷேட தரத்திற்கு உயர்த்தப்படுவார்கள்.

5. **விண்ணப்பத்தை தயாரித்தல் மற்றும் பூரணப்படுத்தல் :**

i. அனைத்து விண்ணப்பப் படிவங்களும் A4 (துட்டச்சு கடதாசியில்) அளவிலான கடதாசியின் இரு புறங்களையும் பாவனைக்கு உட்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை பூரணப்படுத்துகையில் அதற்குரிய தகவல்களை தமது சுய கையெழுத்திலேயே தெளிவாக உட்சேர்க்க வேண்டும். பூரணமற்ற தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் விண்ணப்பத்தின் நகல் பிரதியொன்றை தம் வசம் வைத்திருப்பது உபயோகமானதாக இருக்கும்.

விண்ணப்பப் படிவம் :-

முதலாவது பக்கம் : இல. 01 தொடக்கம் 04 வரையிலும்
இரண்டாவது பக்கம் : இல. 05 தொடக்கம் 14 வரையிலும்
மூன்றாவது பக்கம் : உப திணைக்கள தலைவரின் விதப்புரை உள்ளடக்கப்படும் வண்ணம் தயாரிக்கப்பட வேண்டும்.

ii. பூரணப்படுத்திய விண்ணப்பமானது அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை ஒத்திருக்க வேண்டும்.

iii. விண்ணப்பத்துடன் எந்தவொரு சான்றிதழின் மூல பிரதியையும் இணைத்து அனுப்பிவைக்கக் கூடாது. அவ்வாறு அனுப்பப்படும் மூலப் பிரதிகள் தொடர்பில் பொறுப்பேற்கப்படமாட்டாது.

iv. விண்ணப்பதாரியினால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஆட்சேர்ப்பிற்கான அனைத்து தகைமைகளையும் அடைந்துள்ளார்கள் என கருத்திற்கொண்டு (முன்னோடி பரீட்சையில் தகைமைகள் இல்லையென இனங்காணப்படாத விண்ணப்பதாரிகள் உள்ளடங்கலாக) நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

v. நேர்முக பரீட்சைக்கான அழைப்பானது ஏற்புடைய பதவிக்கு நியமிப்பதற்கான அனைத்து தகைமைகளையும் நிறைவுசெய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்பட முடியாது.

vi. நேர்முக பரீட்சையின் போது அல்லது அதற்கு முன்னர் எவரேனும் விண்ணப்பதாரியொருவரின் பதவி தொடர்பில் தேவையான அடிப்படை தகைமைகளை பூரணப்படுத்தியிராமை குறித்து தெரியவருமிடத்து அவரது எதிர்பார்க்கை இரத்து செய்யப்படும்.

6. இத்துடன் இணைக்கப்பட்டுள்ளள மாதிரி படிவத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2024.05.06 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் புகையிரத பொது முகாமையாளர், புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம், த. பெ. 355 ஓல்கோர்ட் மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். குறித்த திகதிக்கு முன்னர் விண்ணபங்களை சமர்ப்பிக்க தவறினால் நீங்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்காதவராக கருதப்படுவீர்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணபத்தின் மாதிரிப் படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணபத்தினை இடும் உறையின் இடது பக்க மூலையின் மேல் "இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத மேற்பார்வை முகாமையாளர் சேவையில் அதி விஷேட தரம்" என குறிப்பிடப்பட வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

புகையிரத பொது முகாமையாளர்.
புகையிரத திணைக்களம்.

2024, மாச்சு 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக பாவனைக்கு மாத்திரம்

**இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமையாளர் சேவையில் அதிவிஷேட தரத்திற்கு திறமை அடிப்படையில் தரமுயர்த்துவதற்கான விண்ணப்பம் - 2023**

விண்ணப்பிக்கும் பதவி

1. நிரந்தர பாதை பரிசோதகர் ☐
2. கட்டிட பரிசோதகர் ☐
3. இயக்கத் தள போமன் ☐
4. இயந்திர போமன் ☐
5. சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு பரிசோதகர் ☐

(தங்களால் தரமுயர்த்தலுக்காக விண்ணப்பிக்கும் பதவிக்கு முன்னால் ✓ அடையாளத்தை இடுக.)

ஓய்வுபெற்ற பெறும் பெற்/பெறும் திகதி : ☐☐☐☐☐☐☐☐

01. முதலெழுத்துக்களுடன் இறுதியில் வரும் பெயர் :

தமிழில் :.......................................................................................................

.......................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : .......................................................................................................

(உதாரணம்: GUNAWARADHANA, H. M. S. K.) .......................................................................................................

02. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :.......................................................................................................

.......................................................................................................

(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

03. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :.......................................................................................................

.......................................................................................................

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. அலுவலக முகவரி:

.......................................................................................................

.......................................................................................................

06. தனிப்பட்ட முகவரி: .......................................................................................................

.......................................................................................................

07. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

08. புகையிரத மேற்பார்வை முகாமையாளர் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

09. புகையிரத மேற்பார்வை முகாமையாளர் பதவியில் தரம் 1 இற்கு தரமுயர்த்தப்பட்ட திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

10. 2024.05.06 ஆந் திகதிக்கு புகையிரத மேற்பார்வை முகாமையாளர் தரம் 1 பதவியில் சேவைக்காலம் :

வருடம் : ☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

11. ஓய்வு பெற்ற/பெறும் திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

12. விண்ணப்பம் கோரப்படுவதற்கான இறுதி திகதிக்கு அண்மித்த 05 வருட சம்பள ஏற்றத்தினை பெற்றுள்ளீரா?

ஆம்/இல்லை ☐

இல்லை எனின் அவ்வருடங்களை குறிப்பிடுக.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |

13. அண்மித்த 05 ஆண்டினுள் ஒழுக்காற்று தண்டனைகளுக்கு (எச்சரிப்பு தவிர்த்து) உள்ளாகியுள்ளீர்களா?
ஆம்/இல்லை ☐

14. பதவிக்கு ஏற்புடைய கல்வி தொழில்சார் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை மாத்திரம் இணைக்கவும்)

| தொடரிலக்கம் | பாடநெறி | பாடநெறிக்கான காலம் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| | | | |
| | | | |
| | | | |

மேற்கூறப்பட்ட விபரங்கள் நான் அறிந்த வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி :...................... ....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. உப திணைக்கள தலைவரின் விதப்புரை
(பிபொ(பா/வே)/பிபொ.(இ)/பிபொ.(இயந்திரம்)/பிகொ. (சமிக்ஞதொ) இன் விதப்புரை)

I. .................................................. அலுவலகத்தில் சேவை புரிகின்ற திரு. ............................. அவர்களின் வேலை/நடத்தை மற்றும் சேவைக்கு சமுகமளித்தல் திருப்திகரமானது/ திருப்திகரமற்றது. அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்றும்,
(தேவையற்ற சொல்லை வெட்டிவிடவும்.)

II. விண்ணப்பங்களை கோருகின்ற இறுதி திகதிக்கு அண்மித்த 06 வருட காலத்திற்குள் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு தண்டனை பெற்றுள்ளீரா? ஆம்/இல்லை (ஆம் எனில் தவறிழைத்த திகதி, தண்டனை மற்றும் தொடர்பு இலக்கத்தை குறிப்பிடவும்)
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

III. அண்மித்த 05 வருட சம்பள ஏற்றத்தினை முறையாக பெற்றுள்ளீரா? ஆம் /இல்லை ☐

IV. விண்ணப்பதாரி புகையிரத மேற்பார்வை முகாமையாளர் 1 ஆம் தரத்திற்கு தரமுயர்த்தியதன் பின்னர் சம்பளமற்ற/அரைச் சம்பள விடுமுறைகள் உள்ளனவா? ஆம்/இல்லை ☐

V. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையில் 1/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் தண்டனை பெற்றுள்ளீரா? ஆம்/இல்லை ☐

VI. விண்ணப்பதாரி மேலே 01 தொடக்கம் 14 வரை குறிப்பிடப்பட்டள்ள விடயங்கள் அவரது வரலாற்றுத்தாள் மற்றும் தனிநபர் கோவையின் படி சரியானவை என்பதை உறுதிப்படுத்துகிறேன். (சிபாரிசு செய்யவில்லை என்றால் காரணங்களை விபரிக்குக.)
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

VII. விண்ணப்பகோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூரணப்படுத்தியிருப்பதால்/பூரணப்படுத்தாமையினால் விண்ணப்பத்தினை சிபாரி செய்கிறேன்/சிபாரிசு செய்யவில்லை (தேவையற்ற பதங்களை வெட்டிவிடவும்.)
(சிபாரிசு செய்யவில்லை எனின் அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.)
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

(பிபொ(பா/வே)/பிபொ.(இயக்)/பிபொ.(இயந்திரம்)/பிபொ. (சமிக்ஞை/தொலை), (உப திணைக்கள பிரதானியின்)
கையொப்பம் :........................
பெயர் :........................
பதவிப்பெயர் :........................
திகதி :........................
( உத்தியோகபூர்வ இலச்சினை)

4-104

## இலங்கை பாராளுமன்றம்

பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகம்

### வெற்றிடங்கள்

2023 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகச் சட்டத்தின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் பாராளுமன்றத்தின் வரவு செலவுத்திட்ட அலுவலகத்தில் வெற்றிடமாக உள்ள 'பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர்' மற்றும் 'பிரதி பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர்' பதவிகளுக்கு சிறந்த உடல் தகுதியும், திறமையும், நேர்மையும், உயர் நல்லொழுக்கமும் மற்றும் நற்பெயரும் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அரச நிதிப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது சட்டவாக்கத்திற்கு ஒத்துழைக்கும் நோக்கில் பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகம் சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்றவாறும் எதுவித அரசியல் தலையீடும் அற்ற முறையில் செயற்படுதல் வேண்டும். மேலும் அது உரிய தகைமையுடைய பொருளியல் நிபுணர்களை உள்ளடக்கிய பதவியணி ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் உயர் தரத்திலான பகுப்பாய்வுகள் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல் என்பன பிரதான பணிகளாக அமையும்.

அதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் 2024, மே மாதம் 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு 'பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். (இத்தகவல்களை www.parliament.lk எனும் இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.)

**1. பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர்**

**1.1. சம்பள அளவுத்திட்டம் :**
இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 358,150-5×10,030 - ரூபா 408,360.00 ஆகும். (ஏனைய மேலதிகக் கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத் திட்டத்திற்குரிய ஆகக் குறைந்த ஆரம்ப அடிப்படை மாதாந்தச் சம்பளம் ஏறத்தாழ ரூபா 665,000.00 ஆகும்.)

**1.2. வயதெல்லை**
விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்தன்று 65 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**1.3. அனுபவம்:**
அரசாங்க வரவு செலவுத்திட்டம், நிதிக் கொள்கைகள், இறைவரிக் கொள்கைகள் அல்லது பேரினப் பொருளாதாரப் பகுப்பாய்வில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவம்.

**2. பிரதி பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர்**

**2.1. சம்பள அளவுத்திட்டம் :**
இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 302,510 - 5×8,470 - ரூபா 344,860.00 ஆகும். (ஏனைய மேலதிகக் கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத் திட்டத்திற்குரிய ஆகக் குறைந்த ஆரம்ப அடிப்படை மாதாந்தச் சம்பளம் ஏறத்தாழ ரூபா 560,000.00 ஆகும்.)

**2.2. வயதெல்லை :**
விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்தன்று 65 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**2.3. அனுபவம் :**
அரசாங்க வரவு செலவுத்திட்டம், நிதிக் கொள்கைகள், இறைவரிக் கொள்கைகள் மற்றும் பேரினப் பொருளாதாரப் பகுப்பாய்வில் ஆகக் குறைந்தது 10 வருடகால அனுபவம்.

**3. கல்வித் தகைமைகள்**

- பொருளியல், வணிகம், நிதியியல், அரசறிவியல் அல்லது பொது நிர்வாகம் போன்ற தொடர்புடைய கற்கைத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம்
- அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு பட்டமொன்று அல்லது பொருளியல், அரச கொள்கைகள், முகாமைத்துவம், வணிகம் அல்லது நிதியியல் தொடர்பான போதிய அனுபவம்.
- சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்தில் (தனியார் அல்லது அரசதுறை நிறுவனமொன்றில்) குறிப்பிடத்தக்க முகாமைத்துவ/ ஆராய்ச்சி அனுபவம் மற்றும்
- அரசதுறையுடன் முழுமையாக தொடர்புடையதாக உயர்நிலை பாதீட்டியல், பொருளியல், மற்றும்/அல்லது நிதிசார் பகுப்பாய்வுகளுக்கு தலைமைத்துவமளித்தலில் குறிப்பிடத்தக்க அனுபவம்.

4. **திறமைகள் மற்றும் தேர்ச்சிகள்** :

- இலங்கை அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட செயற்பாடு, செலவின முகாமைத்துவ செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட அரசதுறை முகாமைத்துவக் கோட்பாடுகள் தொடர்பான அறிவு.
- அரச நிதி, பேரினப் பொருளாதார மற்றும் நிதி கோட்பாடுகள் மற்றும் அவை பற்றிய நடைமுறைகள் பற்றிய குறிப்பிடத்தக்க அறிவு.
- அரச நிதி தொடர்பான பாராளுமன்றத்தின் சட்டவாக்காப் பொறுப்புக்கள் மற்றும் பல்வேறு பாராளுமன்றத் தரப்பினர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பொறுப்புக்கள் தொடர்பான அறிவு.
- தனிநபர் மற்றும் நிறுவனசார் சுதந்திரத்தைப் பேணிவரும் விதத்தில் சிக்கலான, பாரபட்சமான சூழ்நிலைகளில் போட்டித்தன்மைமிக்க தேவைகளுக்காக உலாவுவதற்கும் பதிலளிப்பதற்குமுள்ள திறன்.
- தொழில்நுட்பம் சாராத பார்வையாளர்களுக்கு தெளிவான மொழியில் சிக்கலான தகவல்களை விரைவாக செயலாக்கம் செய்வதற்கும், திறம்படத் தொடர்புகொள்வதற்குமான திறன் மற்றும் பொதுமக்கள், ஊடகங்கள், அரச நிறுவனங்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசுகள் மற்றும் பிற அமைப்புகளுடன் தொடர்புகொள்ளும்போது செய்தித் தொடர்பாளராகச் செயல்படும் திறன்.

5. **தனிப்பட்ட பண்புகள்** :

- நேர்மை மற்றும் உயர் நெறிமுறை தரநிலை.
- பக்கச்சார்பற்ற தன்மை மற்றும் சுயாதீனம்.
- மூலோபாய சிந்தனை.
- பாரபட்சமான சூழ்நிலைகளின் போது நியாயமாகச் செயற்படல் மற்றும் சாதுரியம்.
- சிறந்த தனிநபர் திறன்கள்.
- உயர் செயல்திறன் கொண்ட அணிகளை வழிநடாத்தல் மற்றும் நிர்வகித்தலில் அனுபவம்.

6. **ஆட்சேர்ப்பு முறை** : கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம்

7. **சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** : 2023 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகச் சட்டத்தைப் பார்க்கவும்.

http://www.documents.gov.lk/files/act/2023/6/06-2023_S.pdf

8. **தகுதியின்மைகள்** : 2023 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகச் சட்டத்தைப் பார்க்கவும். http://www.documents.gov.lk/files/act/2023/6/06-2023_S.pdf

9. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். மேலும் கோரும்போது மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்

10. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள், தமது விண்ணப்பப் படிவங்களை உரிய திணைக்கள /நிறுவன தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

11. பதவியைப் பெறுவதற்காக எந்த வகையிலும் செல்வாக்குச் செலுத்துவது பதவிக்கு தகுதியற்றதாகிவிடும்.

12. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
2024, ஏப்பிறல் 05.

04-195

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத தொகுதி - 2 சேவை வகுதியைச் சேர்ந்த செயற்பாட்டு உதவியாளர் பதவியின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023 (2024)

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் செயற்பாட்டு உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு, தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலில் "திணைக்களத் தலைவர்" எனும் பதம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எனப் பொருள்படும். இந்தப் போட்டிப் பரீட்சை மூலம் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் செயற்பாட்டு உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். வேறு விதத்தில் விசேடமாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் "பதவி" எனும் பதம் செயற்பாட்டு உதவியாளர் எனப் பொருள்படும்.

2. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2024.04.25 ஆகும்.

2.1 எழுத்து மூலப் பரீட்சை: இப்பரீட்சை பின்வருமாறு இரண்டு (02) வினாத் தாள்களைக் கொண்டதாகும்.

i. நுண்ணறிவுப் பரீட்சை
ii. பொது அறிவு

2.2 பரீட்சைத் திகதி: இப்பரீட்சை 2024, யூலை மாதம் கொழும்பு நகரத்தில் நடைபெறும். இந்தப் பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உண்டு.

3. இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுகின்ற பதவிகளின் எண்ணிக்கை ஐம்பது (50) ஆகும். நிலவும் இறுதி வெற்றிடத்திற்கு அல்லது வெற்றிடங்களுக்கு சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள், நிலவும் வெற்றிடங்களையும் தாண்டி காணப்படும் சந்தர்ப்பத்தில் அந்த வெற்றிடத்தை /வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் இறுதி முடிவு எடுக்கப்படும் என்பதுடன், இந்த ஆட்சேர்ப்புக்களில் நியமனம் அமுலுக்கு வரும் திகதியும் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

**4. சேவை நிபந்தனைகள்:**

4.1 அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும் தாபனவிதிக் கோவை ஏற்பாடுகளுக்கும் நிதிப் பிரமாணங்களுக்கும் 2022.12.14 ஆந் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், 2018.10.18 ஆம் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத தொகுதி - 2 சேவை வகுதியைச் சேர்ந்த செயற்பாட்டு உதவியாளர் பதவியின் தரம் III பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்ட வகையில் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் பதவியின் தரம் III க்கு நியமிக்கப்படுவர்.

4.2 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். புதிய நியமனதாரிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் இனிவரும் காலங்களில் எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு நியமனதாரிகள் கட்டுப்படுதல் வேண்டும்.

4.3 இந்த நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்ட விதத்தில் செயற்பாட்டு உதவியாளர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர். நியமனம் பெறுபவர் மூன்று (03) வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

4.4 2020.01.16 ஆந் திகதிய மற்றும் 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையினதும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் பிரகாரம் சேவையில் இணைந்து மூன்று (03) வருட காலப்பகுதிக்குள் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.5 அரசகரும மொழி அல்லாத மொழியொன்றின் மூலம் சேவைக்கு இணைந்திருப்பின் தகுதிகாண் காலப்பகுதியில் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4.6 தனக்கு வழங்கப்படும் பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் / அல்லது நியமிக்கப்படும் பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்க மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உண்டு.

5. இப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம்: 2016.02.25 ஆந் திகதிய 3/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு அமைய இப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 27,140-10×300-11×350-10×495-10×660- ரூபா 45,540 (MN-1/2016) ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

6. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்**:

6.1 (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

6.2 **கல்வித் தகைமைகள்**:

(i) சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலப் பாடம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ii) க.பொ.த. உயர் தரம் பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலேனும் (01) (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

6.3 **உடற் தகைமைகள்**:

(i) விண்ணப்பதாரிகள் உடற் தகைமைக்கு உட்படுத்தப்படுவர். தொழிற்பாட்டு உதவியாளர் (ஆண்) விண்ணப்ப தாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 5 அடி 4 அங்குலம் (162.5 செ.மீ.) ஆகவும் மார்புச் சுற்றளவு (மூச்சுவிட்ட நிலையில்) 32 அங்குலம் (81.25 செ.மீ.) ஆகவும் இருத்தல் வேண்டும். தொழிற்பாட்டு உதவியாளர் (பெண்) விண்ணப்பதாரிகளின் உயரம் ஆகக் குறைந்தது 05 அடி 02 அங்குலம் (157.5 செ.மீ) ஆக இருத்தல் வேண்டும்.

(ii) அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 **வயதெல்லை**:

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பதினெட்டு (18) வயதுக்குக் குறையாமலும் முப்பது (30) வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6.5 **தகைமை பற்றிய வரையறைகள்**

(i) இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் சகல விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(ii) எந்தவொரு மதப் பிரிவிலும் குருத்துவத்தைப் பெற்றுள்ள எவருக்கும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி இல்லை.

7. **பரீட்சைக் கட்டணம்**: பரீட்சைக் கட்டணம் ரூபா அறுநூறு (ரூ. 600.00) ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 20-03-02-13 எனும் வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கும் வகையில், தீவின் எந்தவொரு தபால்/உபதபால் அலுவலகத்திலும் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த முடியும். பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூண்டில் ஒட்டுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. பரீட்சைக் கட்டணம் சார்பில் காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

*8.* **விண்ணப்பிக்கும் முறை:**

*8.1* இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக, $8\frac{1}{2}'' \times 12''$ அளவிலான கடதாசியின் (A4) இரு பக்கங்களையும் பயன்படுத்தி இல. 1 தொடக்கம் 6 வரை முதலாம் பக்கத்திலும், இல. 7 தொடக்கம் 10 வரை இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதிகள் மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு தனது விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பப்படிவங்களை தமது கையெழுத்தில் அல்லது கணினியில்/ தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சு செய்து தயாரித்துக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவம் பரீட்சார்த்தியின் கையெழுத்தினால் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையவாறு தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் பூரணமற்ற விதத்தில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா? என்பதை பரீட்சித்துப் பார்ப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

*8.2* விண்ணப்பங்கள் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*8.3* சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024.04.25 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு,

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனப் பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ. இல. 1503,
கொழும்பு.

என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படுகின்ற கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத தொகுதி - 2 சேவை வகுதியைச் சேர்ந்த செயற்பாட்டு உதவியாளர் பதவியின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023 (2024)" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும் போது, இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய, அதன் தலைப்பை, சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுவது கட்டாயமாகும்.

*8.4* விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பகிரங்க நொத்தாரிசு/முப்படையைச் சேர்ந்த அதிகார ஆணை பெற்ற உத்தியோகத்தர்/பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரசாங்கத்தில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தரொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

*8.5* எல்லா விதத்திலும் பரிபூரணமாக இல்லாத விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் காணாமல் போகும் அல்லது பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

*8.6* விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில், எல்லா விதத்திலும் பரிபூரணமான விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அதனை அறிவிக்கும் வகையில், பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகையில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு (02) அல்லது மூன்று (03) நாட்கள் கடந்ததன் பின்பும் தமக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்காவிட்டால், அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அதனை அறிவித்தல் வேண்டும். இவ்வாறு அறிவிக்கும் போது, விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இல., முகவரி ஆகிய விபரங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பிடத்தைக் கொண்டவராக இருப்பின், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு வசதியாக, மேற்சொன்ன

விபரங்களுடன் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, தமது கோரிக்கைக் கடிதத்தை குறித்த பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்தினூடாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரிப்பது சாலச் சிறந்ததாக அமையும். மேலும், பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படுகின்ற ஏதேனும் விபரமொன்றை உறுதிப்படுத்தும் வகையில், விண்ணப்பதாரி ஏற்கனவே தம் வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற் பிரதி, விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

9. **பரீட்சைக்குத் தோற்றுதல்:**

9.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும். பரீட்சைத் தினத்தன்று பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

9.2 பரீட்சார்த்திகள், தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை, குறித்த பரீட்சை மண்டபத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் முதலாவது நாளிலேயே கையளித்தல் வேண்டும். பொதுவாக பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும், அறிவுறுத்தல்களும் இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அந்த சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்குக் கட்டுப்படுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு நேரிடும்.

**குறிப்பு**: பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை விநியோகிப்பதானது, அந்தப் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் பதவியொன்றை வகிப்பதற்கும் தேவையான எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளதாக கருதப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**: பரீட்சார்த்தியானவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளை மூடாது பரீட்சை மண்டபத்திற்குள் நுழைதல் வேண்டும். அவ்வாறே தனது அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை நிலையத்திற்குள் நுழைந்தது முதல் பரீட்சை நிறைவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

11. **பொய்யான தகவல்களை வழங்குதல்**: விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக கவனம் செலுத்தி மிகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கு அமைய எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரிய வரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்தப் பரீட்சார்த்தியின் பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும்.

12. இந்த அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பரீட்சையை நடாத்துதல்:

13.1 இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

13.2 பரீட்சைக்குத் தோற்றும் மொழி நியமனத்தின் ஊடக மொழியாக கருதப்படும்.

**குறிப்பு**:

(i) பரீட்சார்த்தியொருவர் தாம் பரீட்சைக்குத் தோற்றும் நுண்ணறிவு மற்றும் பொது அறிவு ஆகிய இரண்டு வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடை அளித்தல் வேண்டும்.

(ii) தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**14. ஆட்சேர்ப்பு நடைமுறை**:

**14.1 எழுத்துமூலப் பரீட்சை**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களைக் கொண்ட இரண்டு (02) வினாத் தாள்களைக் கொண்டதாக எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் பரீட்சையின் எல்லாப் பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். பரீட்சை நடாத்தப்படும் பாடங்களும் அந்தப் பாடங்களில் சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளும் பின்வருமாறு:

| பாட இல. | பாடம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் | காலம் (மணித்தியாலங்கள்) |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 | 1 |
| 02 | பொது அறிவு | 100 | 40 | 1 |

**14.2 நேர்முகப் பரீட்சை**

குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் எழுத்துமூலப் பரீட்சையில் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்றி அனைத்து வினாப்பத்திரங்களிலும் ஆகக் குறைந்தது 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கும் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு “அதிகபட்ச புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும்” விண்ணப்பதாரிகளுக்கு சாதாரண நேர்முகப் பரீட்சையும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையும் நடத்தப்படும்.

(i) **சாதாரண நேர்முகப் பரீட்சை**

மேற்படி இலக்கம் 14.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துமூலப் பரீட்சையில் தகைமைப் பெறும் விண்ணப்பதாரிகள் சாதாரண நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைப் பெறுவதோடு மேற்படி இலக்கம் 6 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பற்றிய வரையறைகளுக்கு அமைவாக உள்ளனவா என்பதையும் பரீட்சிப்பதற்காக இந்த நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இதற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(ii) **தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை**

சாதாரண நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புக்கான அனைத்து தகைமைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சைக்கு தகைமைப் பெறுவர். விண்ணப்பதாரிகளின் மேலதிக தகைமைகள், ஆற்றல்கள் மற்றும் திறமைகளை அளவிடுவதற்காக தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். அதன் போது பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும் என்பதோடு பெற்றுக்கொள்ள முடியுமான அதிகபட்ச புள்ளிகள் இருபத்தி ஐந்து (25) ஆகும்.

| தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | அதிகபட்ச புள்ளிகள் | தெரிவு செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 05 | ஏற்புடையதன்று |
| கணினி ஆற்றல் | 05 | |
| மொழித் திறமை | 05 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 | |
| வேறு திறமைகள்<br>• விளையாட்டுத் திறமை<br>• சாரணர் /மாணவர் படை (கெடட்)<br>• வேறு தொழிற் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 25 | |

சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளில் எவரேனும் விண்ணப்பதாரிகள் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுக்கொள்ளாத போது அவ்வாறு தகைமைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரிகள் மீண்டும் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

1. ஆட்சேர்க்கப்படவுள்ள எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கிற்கு சமமான எண்ணிக்கையில் தகைமைப் பெற்றவர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் நேர்முகப் பரீட்சைக்கு தகைமைபெற்ற பரீட்சார்த்திகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

2. நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதியை தீர்மானித்தல் மற்றும் நேர்முகப் பரீட்சை சபையை நியமித்தல் என்பன குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு** :

I. எழுத்துமூலப் பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றுக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும். முதலாவதாக எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படுவதோடு எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளில் இருந்து ஆட்சேர்ப்பு செய்வதற்கு உத்தேசிக்கப்படும் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு எண்ணிக்கையினர் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையின் மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது வழங்கப்படும் புள்ளிகளின் மொத்தத்தின் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

II. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் பிரதான துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளிகள் உள்ளிட்ட தகைமை மதிப்பீட்டு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான விரிவான புள்ளித் திட்டம் என்பன நியமன அதிகாரியினால் அனுமதிக்கப்படும்.

கவனத்திற்கொள்க - நேர்முகப் பரீட்சைகளில் பங்குபற்றல் நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக கருதப்படமாட்டாது.

14.3 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய, ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்படும் எண்ணிக்கை ஆட்சேர்ப்புக்கான எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் மொத்தத்தின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரியிலிருந்து திறமை ஒழுங்கில் இந்தப் பதவிக்கு ஆட்சேர்க்கப்படுவர்.

14.4 **பரீட்சைப் பெறுபேறுகள்**

இந்த வர்த்தமானி அறிவித்தலில் 14.1 மற்றும் 14.2 பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு, பரீட்சார்த்திகள் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகள் திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஒட்டுமொத்த பரீட்சைப் பெறுபேற்று அட்டவணை குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் வழங்கப்படும். அதன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைப் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்படும். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அந்தச் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாவதற்கு பரீட்சார்த்திக்கு நேரிடும்.

15. **எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம்**:

(01) **நுண்ணறிவுப் பரீட்சை** - காலம்: 01 மணித்தியாலம், புள்ளிகள்: 100

**நுண்ணறிவுப் பரீட்சை**

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், கணித அடிப்படையிலான திறன், கிரகிக்கும் ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றைச் பரிசோதிப்பதற்கான வினாத்தாள்.

(02) **பொது அறிவு** - காலம்: 01 மணித்தியாலம், புள்ளிகள்: 100

**பொது அறிவு**

இலங்கையின் அண்மைக்கால சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான தகவல்கள், உலக அரசியல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறைகளில் அறிவு, புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் என்பன பற்றிய பொது அறிவை பரிசோதிப்பதற்கான வினாத்தாள்.

16. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய வர்த்தமானி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் அல்லது பொருந்தாத சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தல் மேலோங்கி நிற்கும் என்பதுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கு அமைய செயற்படுதல் வேண்டும்.

ஐ.எஸ்.எச்.ஜே. இலுக்பிட்டிய,
குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம்,
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
"சூஹுறுபாய",
ஸ்ரீ சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத தொகுதி - 2 சேவை வகுதியைச் சேர்ந்த செயற்பாட்டு உதவியாளர் பதவியின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023 (2024)**

Open Competitive Examination for Recruitment to Grade III of Operational Assistant Post of Management Assistant Non - Technical Level Seg- 02 Service of the Department of Immigration and Emigration - 2024

1. மொழி மூலம் (கூண்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக)

| பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் | இலக்கம் |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

(பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துதல் வேண்டும்)

2. தனிப்பட்ட தகவல்கள்

2.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்): ..............................................................................
..............................................................................
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

2.2 முதலெழுத்துகளை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துகளில்): .................
..............................................................................
(உதாரணம்: GUNAWARDANA H.M.S.K.)

2.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..............................................................................
..............................................................................

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துகளில்): ..............................................................................................
..............................................................................................

2.5 இனம் (உரிய இலக்கத்தை கூண்டில் எழுதுக.)
சிங்களம் - 1
தமிழ் - 2
இந்திய தமிழ் - 3
முஸ்லிம் - 4
வேறு - 5

3. பரீட்சை அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி
i. (ஆங்கில பெரிய எழுத்துகளில்): ..............................................................................................
..............................................................................................

ii. (சிங்களத்தில்/தமிழில்): ..............................................................................................
..............................................................................................

4. பால் (கூண்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக):
ஆண் - 0
பெண் - 1

5. தேசிய அடையாள அட்டை இல.:

6. கையடக்க தொலைபேசி இல.:

7. பிறந்த திகதி:
வருடம் : மாதம் : திகதி :

8. தகைமைபெறும் திகதிக்கு வயது: வருடங்கள் : மாதங்கள்: நாட்கள் :

9. கல்வித் தகைமைகள்:

9.1 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை

| சித்தியெய்திய திகதி | பரீட்சைச் சுட்டெண் | பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

9.2 க.பொ.த. உயர் தரப் பரீட்சை

| சித்தியெய்திய திகதி | பரீட்சைச் சுட்டெண் | பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

10. **உடற் தகைமைகள்:**

10.1 உயரம்:
............ அடி, ............ அங்குலம் அல்லது ...................... சென்றி மீற்றர்

10.2 மார்புச் சுற்றளவு (பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது):
............ அடி, ............ அங்குலம் அல்லது ...................... சென்றி மீற்றர்

11. 11.1 ஏதேனும் குற்றவியல் குற்றத்திற்கு நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
................ (ஆம்/இல்லை)

11.2 "ஆம்" எனில் அது தொடர்பான விபரங்களைத் தருக.: ..................................................................................................
..................................................................................................................................................................

12. 12.1 தாங்கள் தற்போது அரசாங்க சேவையில் பதவியொன்றை வகிக்கின்றீரா?................ (ஆம்/இல்லை)

12.2 'ஆம்' எனில் அது தொடர்பான விபரங்களைத் தருக.:.: ..................................................................................................
..............................................................................................................

13. தாங்கள் அரசாங்க சேவையில் பதவியொன்றை வகித்து பதவிநீக்கப்பட்ட/பதவி விலகிய ஒருவரா என்பது பற்றி ................
..............................................................................................................................

14. பரீட்சைக் கட்டணம்

i. செலுத்தப்பட்ட தபால்/உப தபால் அலுவலகம் : ..................................................................................
ii. செலுத்திய தொகை : ..................................................................................
iii. செலுத்திய திகதி : ..................................................................................
iv. பற்றுச்சீட்டு இல. : ..................................................................................

| |
|---|
| பற்றுச் சீட்டின் ஓர் ஓரமாக வேறாகாதவாறு ஒட்டவும்<br>(பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்) |

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை:
இங்கு என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானதும் சரியானதுமென உறுதியுரைக்கின்றேன். அத்துடன் பரீட்சை சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கும் இந்தப் பரீட்சை தொடர்பான ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கும் ஏற்ப, நான் இந்தப் பதவிக்கு தகுதியற்றவன் எனத் தெரிய வரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எனது அபேட்சகத்துவத்தை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கும் இணங்குகின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்பதையும் உறுதியுரைக்கின்றேன்.

திகதி: .................... ....................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 8(4) இற்கு அமைவாக இருத்தல் வேண்டும்):

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ....................................................................................................
......................... (முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நான் நன்கு அறிவேன் என்பதையும், இவர் என் முன்னிலையில் 2024, ............ அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..................................................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :
பதவி :
முகவரி : :
(பதவி முத்திரையை இடவும்)
திகதி :

04-113

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### வெகுசன ஊடக அமைச்சு

### அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சக சேவையில் நிறைவேற்று அலுவலர் சேவை வகுதியின் வகுப்பு I தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021 (2024)

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சக சேவையில் நிறைவேற்று அலுவலர் சேவை வகுதியின் வகுப்பு I தரம் III பதவிகளில் நிலவும் 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பணிபுரியும் பின்வரும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவனங்கள் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சக சேவையில் நிறைவேற்று அலுவலர் சேவை வகுதியின் வகுப்பு I தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். மேலும், பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **08.05.2024** ஆகும்.

**குறிப்பு** : விண்ணப்பம் அல்லது அது தொடர்பாக ஏதேனும் கடிதம் தபாலில் தொலைந்துவிட்டதாகவோ அல்லது தாமதமாகிவிட்டதாகவோ செய்யப்படும் முறைப்பாடு எதுவும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதிவரை விண்ணப்பங்கள் அனுப்புவதை தாமதிப்பதால் ஏற்படக்கூடிய நஷ்டங்களையும் சேதங்களையும் விண்ணப்பதாரர்களே பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும்.

1. **ஆட்சேர்ப்பு முறை :**

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சீட்டு சேவைப் பிரமாணத்தின் படி எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும் தகைமைகளை பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சை மூலம் உள்ளக பரீட்சார்த்திகள் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் வரையறுக்கப்பட்ட எழுத்து மூலமான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% வீதத்துக்கு மேல் புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி வெற்றிடங்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு தகுதிகளைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபை மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்படும். (நேர்முகப் பரீட்சையின்போது எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது).

நியமிக்கப்பட வேண்டிய எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பின்படி தீர்மானிக்கப்படும்.

2. **சம்பள அளவுத் திட்டம்:**

இந்த பதவியானது 2016, பெப்புருவரி 25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 க்கு ஏற்ப SL - 1-2016 ரூ. 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.00 (மாதாந்தம்) சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்டதாகும்.

3. **பதவிக்கான சேவை நிபந்தனைகள் :**

3.1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதுமாகும். நீங்கள் உரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கத்தால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். அவ்வப்போது அரசினால் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அமைவாக பங்களிப்பு செலுத்துதலும் வேண்டும்.

3.2 இந்தப் பதவிக்கு உள்ளக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் அலுவலர்கள் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

3.3. 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 இன்படி மற்றும் அதனுடன் தொடர்புடைய உரிய அரச கரும மொழியில் /அரச கரும மொழிகளில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

3.4. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதி ஒழுங்குவிதி ஆகியவற்றுக்கும் 2013.06.26 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல. 1816/ 12 இல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சீட்டுச் சேவை பிரமாணங்கள் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உள்ளடங்கிய நிபந்தனைகளுக்குமேற்றவாறு இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

4. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் பதவிகள், தகைமைகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை:**

4.1. நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆறு (06) ஆகும்.

4.1.1. உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி) பதவிக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை நான்கு (04) ஆகும். உதவி அரசாங்க அழுத்தகர் (அச்சீட்டுப் பதிப்பாசிரியர்) பதவிக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை இரண்டு (02) ஆகும்.

4.1.2. உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி) மற்றும் உதவி அரசாங்க அழுத்தகர் (அச்சீட்டுப் பதிப்பாசிரியர்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :

(அ) அச்சுத் திணைக்களத்தில், தேவையான திணைக்களம் சார் பதவியில் உள்ள (முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவையில்) பதினைந்து (15) வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தையும் மற்றும் அச்சக சேவையில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை அலுவலராக (தொழில்நுட்பம்) பணிபுரிபவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கை அச்சக நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அச்சீட்டு கலை (Printing Technology) தொடர்பான பாடநெறிகள் இரண்டை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். (பாடநெறியின் கால எல்லை ஒரு வருடத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்)

(இ) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்று நிரூப இல. 01/ 2020 மற்றும் அதற்கு இணையான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கிணங்க ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.

5. **உடற்றகுதிகள்:**

(அ) அனைத்து உத்தியோகத்தர்களும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் கடமை புரியக்கூடியவராக இருத்தல் அவசியம்.

(ஆ) பதவியின் கடமைகளைச் செய்யக்கூடிய வகையில் உடல் மற்றும் மன உறுதியுடன் இருத்தல் வேண்டும்.

6. **வயது எல்லை :**

திணைக்களத்தில் நிரந்தர பதவியில் பணிபுரியும் உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

7. **ஏனைய தகைமைகள் :**

(அ) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

(இ) எந்தவொரு மதப்பிரிவினதும் துறவியாக இருக்கக்கூடாது.

(ஈ) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான மேலே பந்தி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தையும் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியான 2024.05.08 அன்று பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

8. **எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை:**

8.1. எழுத்துப் பரீட்சை

8.1.1. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இப்பரீட்சை நடாத்தப்படும்.

8.1.2. எழுத்துப் பரீட்சை தொடர்பான பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் :

அச்சீட்டு சேவையில் நிறைவேற்று அலுவலர் சேவை வகுதியின் வகுப்பு I தரம் III ஆட்சேர்ப்பு செய்வதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை பின்வரும் பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சையாக நடாத்தப்படும்.

| | காலம் | அதிகபட்சப் புள்ளிகள் | தேர்ச்சி மட்ட புள்ளிகள் |
|---|---|---|---|
| (அ) பொது நிர்வாகம் | 03 மணி | 100 | 40 |
| (ஆ) அச்சீட்டு தொழில்நுட்பம் | 03 மணி | 100 | 40 |

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| (அ) பொதுநிர்வாகம் | தாபன விதிக் கோவை நடைமுறைகள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் திணைக்களம் சார்ந்த கட்டளைகள் பற்றிய அறிவு மற்றும் அவை சம்பந்தமாக கொண்டுள்ள தெளிவு பற்றி பரீட்சிப்பதற்கான வினாக்களைக் கொண்ட ஒரு பரீட்சை |
| (ஆ) அச்சிடுதல் தொழில்நுட்பம் | (I) முன் அச்சீடு - கணினி தட்டச்சு (Type Setting), பக்கம் தளவமைப்பு (Page Lay out), கணினி வரைகலை, கேமரா வேலைகள் செயலாக்கம், புகைப்படங்கள் உபயோகித்து வடிவமைத்தல் மற்றும் Rip Making, படவமைப்பு, அச்சுத்தகடு தயாரிப்பு முறை, பொலிமர் தகடு தயாரித்தல்<br>(II) அச்சிடுதல் - ஓப்செட் லிதோ அச்சீடு, ஓப்செட் லிதோ வெப் பிரின்டிங், லெட்டர் பிரஸ் அச்சீடு, லெட்டர் பிரஸ் ரொட்டரி அச்சீடு<br>(III) அச்சுக்குப் பின் - வெட்டுதல் (Cutting), மடித்தல் (Folding), இடைச் செருகல் (Inserting), ஒன்று சேர்த்தல் (Gathering) மற்றும் Insert பண்ணுதல். வயர் ரெப்பிங், பகுதியாக தைத்தல் மற்றும் Perfect Binding) கேஸ் கவர் தயாரித்தல், லெட்ஜர் தயாரித்தல், பொயில் தயாரித்தல், மீண்டும் புத்தகம் மீளக்கட்டுதல் (Re Binding), விசேட பைண்டிங் வேலை<br>(IV) ஏனையவை - டை கட்டிங், பிளைண்ட் எம்போசிங், Foil லெமினேட்டிங், கிரீஸ் (மடிப்பு) பண்ணுதல், துளையிடுதல், செலவு (Costing) மற்றும் மதிப்பீடு (Estimating), பாதுகாப்பு அச்சீடு<br>(V) எதிர்காலத் தேவைகள் - தட்டு அமைத்தல் (Plate Setting), தொடர்ச்சியான காகிதாதிகள் (ஸ்டேசனரி) அச்சீடு, டிஜிட்டல் அச்சீடு<br>(VI) கம்பைலிங் (Compiling) தொகுத்தல், முன் சரவையிடுதல், ஒப்புநோக்கல் (Proof Reading), இயந்திர சரவை சரிபார்த்தல்.<br>(VII) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பாகங்கள் பராமரிப்பு மற்றும் அவற்றை பழுதுபார்த்தல், மின்சார உபகரண பாகங்கள் உட்பட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உடைந்த பாகங்களை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இலக்ட்ரோனிக் பாகங்களை பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல், கணினிகள் மற்றும் சாதனங்களை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல், கட்டிடங்களின் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல். (மின்சார பாகங்கள் உட்பட) |

(மேலேயுள்ள ஒவ்வொரு பிரிவிலிருந்து கேள்விகள் கொடுக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அவர்கள் விரும்பும் நான்கு பிரிவுகளில் ஏதேனும் கேள்விகளுக்கு பதிலளிக்க வாய்ப்பு வழங்கப்படும்).

8.2. பொது நேர்முகப் பரீட்சை :

8.2.1. பொது நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. அச்சக சேவைப் பிரமாணத்தின் படி வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியை விண்ணப்பதாரர் பூர்த்தி செய்துள்ளாரா என்பதை பரீட்சித்துப் பார்ப்பதே இந் நேர்முகப் பரீட்சையின் நோக்கமாகும்.

9. **பரீட்சை நிபந்தனைகள் :**

9.1. பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தாங்கள் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். விண்ணப்பதாரர்கள் இந்தப் பரீட்சையில் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே பதிலளிக்க வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்குத் தோற்றும் மொழியை பின்னர் மாற்றம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இரண்டு வினாப்பத்திரங்களுக்கு (02) தோற்றுதல் வேண்டும்.

9.2. பரீட்சைக் கட்டணம் :
பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். பரீட்சைக் கட்டணமானது, பரீட்சை ஆணையாளரது வருமானத் தலைப்பு 20-03-02-13 க்கு வரவு வைக்கப்படும் விதத்தில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால் நிலையத்திலும் செலுத்தி, விண்ணப்பதாரரின் பெயரில் பெறப்பட்ட ரசீதை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் ஒரு மூலையில் ஒட்டப்பட வேண்டும். (ரசீதின் நிழற்படப் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்வது பயனுடையதாக அமையும்).

9.3. பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது.

9.4. இந்தப் பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

9.5. பூரணப்படுத்தப்படாத மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு** : அனுமதி அட்டை இல்லாமல் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சை தொடங்கும் திகதியன்று பரீட்சை மண்டப தலைமை அதிபதிக்கு தமது அனுமதி அட்டையை கையொப்பம் இட்டு உறுதி செய்து வழங்குதல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெற்றதாகக் கருதப்படக்கூடாது.

9.6. விண்ணப்பப்படிவமானது செ. மீ. 22 × 29 அளவில் A4 கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களை 1.0 முதல் 3.7 வரையான விடயங்கள் முதலாம் பக்கத்திலும் 3.8 முதல் 6.0 வரையான விடயங்கள் இரண்டாவது பக்கத்திலும் ஏனையவை மூன்றாம் பக்கத்திலும் அமையும் வகையில் தயார் செய்தல் வேண்டும். மேலும் இது தொடர்பான தகவல்கள் தங்கள் சொந்த கையெழுத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திராத விண்ணப்பங்கள் மற்றும் முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்களும் எவ்வித அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதியொன்றை வைத்திருப்பது பயனுடையதாக அமையும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவதுடன் ஒத்துள்ளதா என்பதை விண்ணப்பதாரர் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையெனில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

9.7. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டதும் உடனடியாக பத்திரிகைகளில் அறிவிப்பு செய்யப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்களுக்குப் பிறகும் அனுமதி அட்டை கிடைக்காவிட்டால், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தம்வசம் வைத்துள்ள விண்ணப்பத்தின் நகல் மற்றும் பதிவுத் தபால் ரசீதின் நகல் மற்றும் கொழும்பிற்கு வெளியேயாயின் அனுமதி அட்டையை பெற்றுக் கொள்வதற்காக பெக்ஸ் இலக்கம் ஆகியவற்றை உங்கள் கோரிக்கை கடிதத்தில் குறிப்பிட்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

9.8. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் பரீட்சையை ஒத்திவைக்க அல்லது இரத்துச் செய்ய பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

9.9. பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு வருகை தருவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும். அந்த சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவார்.

9.10. பரீட்சை விண்ணப்பதாரர்/விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றவுள்ள எல்லாப் பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையுமாறு தமது ஆளடையாளம் உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் (பாஸ்போர்ட்) கடவுச்சீட்டு;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும் பரீட்சை எழுதுபவர்கள் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துமுகமாக முகத்தையும் இரண்டு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை, விண்ணப்பதாரர் தனது முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும். இதனால் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரை அடையாளம் காணக்கூடியதாக இருக்கும்.

**குறிப்பு** :

(அ) விண்ணப்பத்துடன் எந்தவிதமான ஆவணமோ அல்லது அதன் நகல் பிரதிகளோ இணைக்கப்படக்கூடாது.

(ஆ) கோரப்படும் போது ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களது விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(இ) விண்ணப்பதாரர்கள் தங்களது திணைக்களத் தலைவரூடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முன், திணைக்களத்தில் நிறைவேற்று அலுவலர் ஒருவர் மூலம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி சான்றளித்தல் அவசியமாகும்.

10. **தவறான தகவலை வழங்குவதற்கான அபராதம்** :

பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்போ அல்லது எந்தவொரு நேரத்திலும் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவர் என கண்டறியப்பட்டால், அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். ஒரு விண்ணப்பதாரர் தெரிந்தே தவறான தகவலைச் சமர்ப்பித்ததாக தெரியவந்தாலோ அல்லது அவர் ஏதேனும் முக்கியமான தகவலை வேண்டுமென்றே மறைத்தாலோ அவர் பதவி நீக்கத்துக்கு ஆளாவார்.

11. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், அரசாங்க பணி தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் அச்சக சேவையில் நிறைவேற்று அலுவலர் சேவை வகுதிக்கு வகுப்பு I தரம் III தேவையான அச்சக சேவை பிரமாணத்தில் மற்றும் அவற்றில் மேற்கொண்ட திருத்தங்களில் அடங்கியுள்ள நிபந்தனைகள் இந்தப் பதவிகளுக்குப் பொருந்தும்.

12. மேலும், இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர்கள், அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் மட்டுமன்றி, அரசாங்கத்தின் தேவைக்கேற்ப இலங்கையில் உள்ள எந்தவொரு இடத்திலும் இரவு, பகல் சேவையில் பணியாற்ற வேண்டும்.

13. இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர் இலங்கை அரசாங்கத்தின் தேவைக்கேற்ப வெளிநாட்டில் எந்தவொரு இடத்திலும் பணியாற்ற ஒப்புக் கொள்ள வேண்டும்.

14. இந்த விதிமுறைகளில் குறிப்பிடப்படாத எந்த விடயத்தையும் அரசாங்க சேவை ஆணைக்குழு முடிவு செய்யும்.

15. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி அறிவிப்பே மேலோங்கி நிற்கும்.

16. மேலே குறிப்பிட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புதல், நிரப்பாது விடல் அல்லது பகுதியளவில் நிரப்புதல் குறித்து இறுதி முடிவெடுக்கும் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

**வீ. பீ. கே. அனுஷ பெல்பிட்ட,**
செயலாளர், ஊடக அமைச்சு,

2024, ஏப்பிறல் 03.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

(அலுவலக உபயோகத்திற்காக)

**அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சக சேவையில் நிறைவேற்று அலுவலர் சேவை வகுதியின் வகுப்பு I தரம் III இற்கு உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி) மற்றும் உதவி அரசாங்க அழுத்தகர் (அச்சீட்டு பதிப்பாசிரியர்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021 (2024)**

Limited Competitive Examination for Recruitment to the Printing Service Executive Service of Class I Grade III Posts of Assistant Government Printer (Production) and Assistant Government Printer (Printing Editor) in the Department of Government Printing 2021 (2024)

1.0 **மொழிமூலம் :**
பரீட்சைக்குத் தோற்றும் மொழி
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

2.0 **விருப்பத்தை தெரிவித்தல் :**
கோரப்படும் பதவி/பதவிகள்
(விருப்பத்திற்கமைய) விருப்பு 1
விருப்பு 2
உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி) -1
உதவி அரசாங்க அழுத்தகர் (அச்சீட்டு பதிப்பாசிரியர்) -2
(நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி தொடர்பான விருப்பு இலக்கத்தை தொடரொழுங்கில் வெற்றுக் கூட்டுக்குள் இடவும்.)

**குறிப்பு:** ஒரு விண்ணப்பதாரர் மேலே குறிப்பிட்டுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படக்கூடாது. மேலும் ஒவ்வொரு பதவிக்கான விருப்புத் தெரிவுகளையும் ஒரே விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் அவ்விருப்புத் தெரிவுகளை பின்னர் மாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

3.0 **பிரத்தியேக தகவல் :**

3.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
..............................................................................................................................................

3.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :
..............................................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : (SILVA, A. B.)

3.3 முழுப் பெயர் (சிங்களம்/தமிழ்) :
..............................................................................................................................................

3.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
..............................................................................................................................................

3.5 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழ்) :
..............................................................................................................................................

3.6 கையடக்கத் தொலைபேசி இல. :

3.7 தேசிய ஆளடையாள அட்டை இல. :

3.8 பால் :
(ஆண் - 0, பெண் - 1)
குறித்த இலக்கத்தைக் கூட்டில் இடவும்)

3.9. விவாகமானவரா/விவாகமாகாதவரா ?: ☐
(விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2)
குறித்த இலக்கத்தைக் கூட்டில் இடவும்)

3.10. பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.11 விண்ணப்பம் கிடைக்கப்பெறும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.12 திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை அனுப்புகிறீர்களா? : ....................................................

4.0 **தகைமைகள் தொடர்பான தகவல்கள் :**

4.1 நீங்கள் அரசாங்க அச்சுத் திணைக்களத்தில்,

4.1.1 அச்சக சேவைக்கு நியமனம் பெற்ற திகதி : ....................................................

4.1.2 தற்போது வகிக்கும் பதவி : ......................................................................
இணைக்கப்பட்டுள்ள கிளை (Section) : ....................................................

4.1.3 2024.05.08 ஆந் திகதியன்று சேவைக்காலம் :
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4.2 நீங்கள் அச்சக தொழில்நுட்பம் பயின்ற ஓராண்டுக்கு குறையாத பாடநெறி மற்றும் அந்த பாடநெறியை பயின்ற நிறுவனத்தின் பெயர்கள் :

| | *பாடநெறி I* | *பாடநெறி II* | *பாடநெறி III* |
|---|---|---|---|
| பாடநெறியின் பெயர் | | | |
| நிறுவனம் | | | |
| பாடநெறியின் கால எல்லை | | | |
| மொழி மூலம் | | | |
| சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி | | | |

5.0 **பணம் செலுத்திய ரசீது**:

(ரசீதை இங்கே கழன்று விடாமல் ஒட்டவும்)
(ரசீதின் நகல் ஒன்றை தங்கள் வசம் வைத்துக் கொள்வது பயனுடையதாக இருக்கும்.)

6.0 **விண்ணப்பதாரரின் சான்றுரை :**
இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவையும் சரியானவையுமெனவும், 2013.06.26 ஆந் திகதிய 1816/ 12 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அச்சக சேவை பிரமாணம் மற்றும் அவற்றில் மேற்கொண்ட திருத்தங்களின்படி இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கத் தேவையான

தகைமைகளைப் பெற்றுள்ளேன் எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதை இத்துடன் இணைத்துள்ளேன் என்றும் உறுதியளிக்கின்றேன். இந்தப் பரீட்சையின் விதிகள் மற்றும் விதிமுறைகளின்படி செயல்படுவேன் எனவும், இப்பரீட்சையின் நிபந்தனைகளின் கீழ் நான் தகுதியற்றவன் என்று கண்டறியப்பட்டால் (பரீட்சைக்கு முன்போ பரீட்சையின் போதோ அல்லது அதற்குப் பின்னரோ எனது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படுவதற்கு எடுக்கப்படுகின்ற எந்த முடிவுக்கும் நான் அமைந்து நடக்க ஒப்புக் கொள்கிறேன். பரீட்சை நடத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வகுத்துள்ள விதிகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் உறுதியளிக்கின்றேன்.

....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .....................

7.0 **விண்ணப்பதாரர் பணிபுரியும் கிளைக்கு பொறுப்பான அதிகாரியின் சான்றுரை :**

இந்த விண்ணப்பதாரர் அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் ............................................. கிளையில் ........................... பதவி வகிக்கும் அலுவலராகப் பணிபுரிகிறார் என்பதை உறுதிப்படுத்தி, மேலும் இவரின் விண்ணப்பத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு சிபாரிசு செய்கின்றேன்.

................................
கிளையின் நிறைவேற்று அலுவலரின்
கையொப்பம்.

திகதி : ....................................
கிளையின் நிறைவேற்று அலுவலரின் பெயர் : ........................................
பதவி : ....................................
முகவரி : ..................................................
(அதிகாரபூர்வ முத்திரையுடன் உறுதிப்படுத்த வேண்டும்.)

8.0 **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (அறிவித்தல் 9.10 (இ) இன்படி அமைதல் வேண்டும்.)**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ...................................... (முழுப்பெயர்) என்பவர் அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் சேவை புரிகிறார் என்றும், குறித்த பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும், அதற்கான ரசீதை இத்துடன் இணைத்துள்ளார் என்றும் ........................... ஆந் திகதி அவர் தமது கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் என்றும் இத்தால் சான்றளிக்கின்றேன்.

.......................
கையொப்பத்தை சான்றளிக்கும்
அதிகாரியின் கையொப்பம்.

திகதி : ....................................
கையொப்பம் சான்றளிக்கும் அதிகாரியின் பெயர் : ........................................
பதவி : ....................................
முகவரி : ..................................................
(அதிகாரபூர்வ முத்திரையுடன் உறுதிப்படுத்த வேண்டும்.)

9.0 **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ..................................................................... இந்த திணைக்களத்தின் ..........................ஆக பணிபுரிகிறார். மேலும் அவர் 2013.06.26 ஆந் திகதிய 1816/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சீட்டு பிரமாணத்தின்படி மேலே 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அதில் செய்யப்பட்ட திருத்தங்களின்படி

அவர் எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனையையும் பெறவில்லை என்பதோடு, மேற்குறிப்பிட்ட திகதிக்கு ஐந்து (05) ஆண்டு காலத்திற்குள் திருப்திகரமான பங்களிப்புக் காலத்தை நிறைவு செய்துள்ளார் என்றும், அதற்கேற்ப அவரது விண்ணப்பம் பரிந்துரைக்கப்பட்டது என்றும் சான்றளிக்கின்றேன்.

........................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி : ....................................
திணைக்களத் தலைவரின் பெயர் : ........................................
பதவி : ....................................
முகவரி : ..................................................
(அதிகாரபூர்வ முத்திரையுடன் உறுதிப்படுத்த வேண்டும்.)

04-213

---

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

இலங்கைச் சுங்கத் திணைக்களம்

### இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் சுங்க பரிசோதகர் தரம் II பதவிக்கு தரமுயர்த்துவதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2024

சுங்க பரிசோதகர் தரம் II பதவியில் தற்போதுள்ள வெற்றிடங்களில் 50% இனை நிரப்பப்புவதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள, சுங்க காவலர் தரம் II பதவியிலுள்ள அலுவலர்களிடமிருந்து நிகழ்நிலை ஊடாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்:**

1.1 தொழிற் தகைமைகள்:

i. சுங்க காவலர் தரம் II பதவியிலுள்ள அலுவலராக இருத்தல்.

ii. உடன்முன்னரான 05 வருட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தினைக் கொண்டிருத்தல் மற்றும் அக்காலப்பகுதியில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்திருத்தல்.

iii. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கமைய, பதவியுயர்வுத் திகதிக்கு முன்னரான ஐந்து (05) வருடங்களினுள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்குமேல் செயலாற்றுகையினைவெளிப்படுத்தியிருத்தல்.

iv. சுங்க காவலர் தரம் II பதவியோடு சம்பந்தப்பட்டவினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகளில் சித்தியெய்தியிருத்தல்.

1.2 அனுபவம்:

சுங்க காவலர் தரம் II அலுவலராக ஆகக் குறைந்தது குறித்த தரத்தில் 03 வருட சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்திருத்தல்.

**குறிப்பு:**
2026.12.31 ஆம் திகதி வரையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் வரையறுக்கப்பட்ட பிரிவின் கீழ் ஆட்சேர்க்கப்படுவர்.

i. சுங்ககாவலர் தரம் III பதவியில் குறைந்தது எட்டு (08)வருடங்கள் செயலூக்கமிக்கதும், திருப்திகரமானதுமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்திருத்தல்.
ii. நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.

iii. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020இன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கையொன்றுக்கு உட்படாதிருத்தல்.

iv. எட்டு (08) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கமைய,எட்டு(08) வருட திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையினைக் கொண்டிருத்தல்.

v. தொடர்புபற்ற வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்திருத்தல்.

vi. உரியஅரச கரும மொழித்தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்.

1.3 ஏனையவை:

i. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020இன் பிரகாரம் குறித்த காலப் பகுதியினுள் ஏதும் ஒழுக்காற்று நடவடிக்கையொன்றுக்கு உட்படாதிருத்தல்.

ii. பதவிக்கு ஆட்சேர்ப்பதுடன் சம்பந்தப்பட்ட, மேலே 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பரீட்சார்த்திகள் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இறுதித் தினமாகிய 2024.04.22 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்திருப்பது கட்டாயமானதாகும்.

02. விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services” என்ற பிரிவின் கீழுள்ள “Online Application - Recruitment Exams” இல் வெளியிடப்பட்டுள்ளதோடு விண்ணப்பப் படிவத்தினை நிகழ்நிலையில்(Online)மாத்திரம் சமர்ப்பிக்கலாம்.விண்ணப்பப்படிவங்களை எற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 2024, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதியாகும். நிகழ்நிலை வழியாக விண்ணப்ப படிவங்களை ஏற்றுக்கொள்வதானது, 2024ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆம் திகதி மு.ப.9.00 மணிக்கு ஆரம்பமாகி, 2024, ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆம் திகதி இரவு9.00 மணிக்கு முடிவடையும். விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலையில் சமர்ப்பித்ததன் பின்னர் அதனை பதிவிறக்கஞ் செய்து,அதன் அச்சுப்பிரதியிலுள்ள உரிய பகுதிகளை விண்ணப்பதாரர் கையெழுத்தினால் நிரப்பி அதனைப் பெயர்வழிக் கோவையில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

நிகழ்நிலை (Online) வழியான விண்ணப்பப் படிவங்களை ஆங்கில மொழியில் மாத்திரம்பூரணப்படுத்துதல் வேண்டும். நிகழ்நிலை வழியில் விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது எவ்வாறு என்பது குறித்து தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை (Instructions) விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளவது சிறந்தது. விண்ணப்ப படிவத்தை பூர்த்திசெய்கையில் இந்த வழிகாட்டுதல்கள் கட்டாயமாகப் பின்பற்றப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியில் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் செல்லுபடியற்றதாகும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் யாவும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

இப் பரீட்சைக்கான கட்டணம் ரூபா 600/- ஆகும். பரீட்சைக் கட்டணத்தினை செலுத்துகையில் நிகழ்நிலை வழியாக ஏற்படுத்தப்பட்டுள்ள பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளில் ஏதேனுமொன்றின் கீழ் மாத்திரம் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

i. ஏதேனும் வங்கியொன்றின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

ii. இணைய வழியில் கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய ஏதேனுமொரு வங்கியின் செயலாக்கம் செய்யப்பட்ட பற்று அட்டைமூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கியின்ஆன்லைன் பேன்கிங் முறைமை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)

iv. ஏதேனும் இலங்கை வங்கிக்கிளையொன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

**குறிப்பு**:

(அ) மேற்குறித்த முறைமையொன்றின் கீழ் கொடுப்பனவினை மேற்கொள்கின்ற முறை தொடர்பிலான வழிகாட்டல்கள் இணையதளத்தில் பரீட்சைகளுக்கான தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றதும் அது தொடர்பில் குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் முழுமையாக செலுத்தப்படுதல் வேண்டும். கட்டணம் குறைவாகவோ அல்லது மிகையாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறையின்

கீழ் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதில் ஏற்படும் தாமதங்கள் குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) இக்கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீளளிக்கவோ அல்லது வேறொரு பரீட்சைக்காகவோ மாற்றப்படமாட்டாது.

03. இப்பரீட்சையானது எழுத்துப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். எழுத்துப் பரீட்சைப் பாடத்திற்காக வழங்கப்படுகின்ற புள்ளிகள் மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் என்பன பின்வருமாறு :

1 ஆம் பிரிவு-எழுத்துப் பரீட்சை

| | மொத்தப் புள்ளி | கடவுப் புள்ளி |
|---|---|---|
| விடய ஆய்வு(01 மணித்தியாலம்) | 100 | 50 |

2 ஆம் பிரிவு - பொது நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)

பதவிக்கு ஆட்சேர்ப்பிற்குத் தேவையானஅடிப்படைத் தகைமைகளை பரீட்சார்த்திகள் பெற்றுள்ளனரா என்பதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து, உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள் பெற்றுள்ள புள்ளித் தகைமையின் இறங்கு வரிசைக்கு அமைய, பதவியில் வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டு, தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் ஆட்சேர்க்கப்படுவர்.

இப்பரீட்சையானது சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் நடாத்தப்படும்.விண்ணப்பதாரர்கள் குறித்த பரீட்சைக்கு ஒரு மொழியில் மாத்திரம் தோற்றுதல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை சமர்ப்பித்ததன் பின்னர் விண்ணப்பதாரருக்கு பரீட்சையின் மொழியினை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தற்போதுள்ள சேவைக்கு உள்வாங்குவதற்காகத் தகுதிபெற்ற மொழியில் இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம். பரீட்சையினை நடாத்துவது மற்றும் பெறுபேற்றினை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

04. இப் பரீட்சையில் விடய ஆய்வுப் பாடத்துக்காக பரிந்துரைக்கப்பட்ட பாடத்திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற துறைமுகங்கள், ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்கள்,விமான நிலையங்கள் மற்றும் ஏனைய சுங்க வளாக வாயில்களுக்குள் நுழையும் மற்றும் வெளிச்செல்லும் வாகனங்கள், நபர்கள், பயணிகள் மற்றும் பொதிகள் தொடர்பிலான பரிசோதனை.

2. சுங்க அலுவலகங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்கள், ஏனைய சுங்க வளாகங்கள், சுங்கக் கிடங்குகள் மற்றும் பிணைக் குதங்களில் களஞ்சியப்படுத்துவதற்காக கொண்டு வரப்படுகின்ற, சுங்கத் தடைநீக்கத்தின் பின்னர் விடுவிக்கப்படுகின்ற பண்டங்களைக் களஞ்சியப்படுத்தல், வெளிக்கொண்டு செல்ல அனுமதித்தல் அவற்றுடன் தொர்பான ஆவணங்களை ஆவணப்படுத்தல் மற்றும் குறித்த ஆவணங்களைப் பாதுகாத்தல்.

3. சாவிப் பொறுப்புக்கடமைகள் (Key Duties)

4. விசேட நடவடிக்கைகள், சுற்றிவளைப்புக்கள் மற்றும் கைதுசெய்தல்கள்

5. சுங்கத்தில் தடுத்து வைக்கப்படுகின்ற, கைது செய்யப்படுகின்ற பறிமுதல் செய்யப்படுகின்ற பண்டங்கள், கொள்கலன்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஆவணங்கள்

6. தீர்வைக் கட்டணங்கள் மற்றும் ஏனைய சுங்கக் கட்டணங்கள் செலுத்தப்படாத பண்டங்களை சுங்கத் திணைக்களத்தின் சார்பில் தமது மேற்பார்வையின் கீழ் எடுத்துச் சென்று ஒப்படைத்தல்.

போன்ற மேலே குறிப்பிட்டுள்ள கடமைகள்தொடர்பில் விசேட கவனம் செலுத்தி,சுங்கப் பரிசோதனைக் கடமைகளுடன் தொடர்புபற்ற நடைமுறைகளை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படுகின்ற விடய ஆய்வுகளை (Case Studies) உள்ளடக்கிய எழுத்துப் பரீட்சை ஒன்றின் மூலம் விடய அறிவு பரீட்சிக்கப்படும்.

05. 5.1 விடய ஆய்வு என்ற பாடத்திற்கு ஆகக் குறைந்தது 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து, மற்றும் நேர்முகப் பரீட்சையில் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் குறித்த ஆட்சேர்ப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய நியமனங்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவதோடு, ஆட்சேர்ப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களில் 10% இற்கு மேற்படாத வெற்றிடங்கள் பெண் விண்ணப்பதாரர்களுக்கும் ஒதுக்கப்படும்.

5.2 பெறுபேறுகளை வெளியிடுதல்

மேலே 5.1 ஆம் பந்திக்கு அமைய தகுதிபெறுகின்ற விண்ணப்பதாரர்களின் பெயர்கள் அடங்கிய பெறுபேறுப் பட்டியல் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு கையளிக்கப்படும். அதன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk உத்தியோகபூர்வ இணையத்தளமான ஊடாக பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

06.

6.1 வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில் விண்ணப்பங்களை சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டதும் அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தலொன்றினை பரீட்சைத் திணைக்களம் வெளியிடும். குறித்த அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் இருப்பின், அது தொடர்பாக அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளையினை உசாவுதல் வேண்டும். அவ்வாறு உசாவுகையில் விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், முகவரி என்பனவற்றை சரியாக குறிப்பிடப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்பின் வெளியே வசிப்பாராயின், மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் அனுமதி அட்டையினைத் துரிதமாக அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு, கோரிக்கை கடிதமொன்றினை அனுப்பி, திணைக்களத்தினை தொடர்பு கொள்ளவது மிகவும் பொருத்தமாக இருக்கும். இதன்போது இலங்கைப் பரீட்சைக் திணைக்களத்தினால் வேண்டப்பட்ட தகவலொன்றினை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துள்ள பதவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட தகவல்கள் என்பனவற்றினை தயார் நிலையில் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும்.

6.2 பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் பரீட்சை மண்டபத்தில் அவர்களுக்கென குறித்தொதுக்கப்பட்ட சுட்டிலக்கத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் நாளிலேயே அவர்கள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டையை கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டையை கையளிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6.3 பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்குமாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் திருப்தியுறும் வகையில் தமது சுய ஆள் அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றினை அவர்கள் சமர்ப்பிக்கலாம் :

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே, விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் முகங்களையும் காதுகளையும் திறந்த நிலையில் பரீட்சை நிலையத்தினுள் நுழைய வேண்டும். மேலும், தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை நிலையத்தினுள் நுழைந்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரையில் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களுக்கு விண்ணப்பதாரர்களை ஆள் அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் திறந்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

07.

7.1 விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டையினை வழங்குவதானது, விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்காக அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றாக கருதுதல் ஆகாது.

7.2 இப் பரீட்சையானது கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதி மற்றும் இடம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

08. பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். அவ்வாறு கட்டுப்படாத அல்லது சட்டதிட்டங்களை மீறுகின்ற பரீட்சார்த்திகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டணைகளுக்கு ஆளாக நேரிடலாம்.

09. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கு மத்தியில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பொருத்தப்பாடின்மின்மைகள் இருப்பின், சிங்கள மொழியில் வெளியிடப்படுகின்ற அறிவித்தலே மேலோங்கிக் காணப்படுதல் வேண்டும் என்பதுடன், இங்கு குறிப்பிடப்படாத வேறேதும் விடயங்கள் தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் தீர்மானத்தினை மேற்கொள்வார்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்,
இலங்கை சுங்கத் திணைக்களம்.

"சுங்க இல்லம்".
இல. 40, பிரதான வீதி.
கொழும்பு 11

04-123

---

**கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு**

இலங்கை அரச கணக்காய்வு சேவையின் நிறைவேற்று சேவை பிரிவில் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2023, (2024)

இலங்கை அரச கணக்காய்வு சேவையின் நிறைவேற்று சேவை பிரிவில் கணக்காய்வு அத்தியட்சகர்களை சேர்த்துக்கொள்வதற்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை 2024, ஓகத்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் கொழும்பில் நடாத்தப்படும். இந்த பரீட்சையை ஒத்திவைப்பதற்கு அல்லது இரத்து செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

அமப/21/1274/301/017 ஆம் இலக்க 2021.09.13 ஆந் திகதி அமைச்சரவையால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானம் மற்றும் 2366/31 ஆம் இலக்க மற்றும் 2024, சனவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரச கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.3 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க இலங்கை அரச கணக்காய்வு சேவையின் நிறைவேற்று சேவை பிரிவில் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிகளுக்கு நிலவும் 165 வெற்றிடங்கள் கீழே 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களை எழுத்து மூலப் பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் உட்படுத்தி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிரப்பப்படும்.

01. **சேவை நிபந்தனைகள் :**

2366/31 ஆம் இலக்க 2024, சனவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரச கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் அந்த சேவைப்பிரமாணக் குறிப்புக்கு இதன் பின்னர் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரசாங்க நிதிப்பிரமாணங்களிற்கும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் பணிப்புரைகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

i. இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும். நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் , ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டும்.

ii. பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு தகைமை பெறும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து வருடமொன்றான தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டு இந்த சேவையில் நியமிக்கப்படுவர்.

iii. பதவிக்கு நியமிக்கப்படும் பரீட்சார்த்திகள் அவர்களது தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தல் பின்வரும் விடயங்களில் தங்கியுள்ளது :

(அ) கடமைகள், வருகை மற்றும் நடத்தைகள் திருப்திகரமாக இருத்தல்;

(ஆ) தகுதிகாண் காலப்பகுதி முடிவடைவதற்கு முன் வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல்.

iv. தகுதிகாண் காலப்பகுதியின் இறுதியின் பதவிகளில் உறுதிப்படுத்தப்படுவதற்கு தவறுமிடத்து அவர் தனது முன்னைய சேவைக்கு/பதவிக்கு அறிக்கையிடல் வேண்டும்.

v. இப்பதவிக்கு நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் 2020.10.16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம், குறிப்பிட்ட பிற அரசகரும மொழியில்/ அரசகரும மொழிகளில் நிபுணத்துவத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

vi. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சிறந்த ஒழுக்கப் பண்பும் நல்ல உடலாரோக்கியமும் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

vii. தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றும் நிபந்தனைக்கு உட்படுவர்.

viii. 2366/31 ஆம் இலக்க மற்றும் 2024, சனவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரச கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 12(V) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்க ஒழுக்காற்று தண்டனை ஒன்றிற்கு உட்படுத்தப்பட்டிருக்கக் கூடாது.

02. **தகைமைகள்**

2024.05.06 ஆந் திகதியில் உள்ளவாறு தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் (முன்னாள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில்) 10 ஆண்டு காலம் தொடர்ச்சியான சேவையைக் கொண்ட பின்வரும் உத்தியோகத்தர்கள் மாத்திரமே இப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

(அ) கணக்காய்வு பரீட்சகர் சேவையில் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் அல்லது உதவி கணக்காய்வு அத்தியட்சகர்கள்

அல்லது

(ஆ) முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையின் விசேட வகுப்பு, 1 ஆம் வகுப்பு அல்லது II ஆம் வகுப்பில் ரூபா 32,900.00 இற்கு குறையாத மாதாந்த திரட்டிய சம்பளமொன்று பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2016 இன் பிரகாரம் பெறும் உத்தியோகத்தர்கள்.

03. **சம்பள அளவுத் திட்டம்:**

2366/31 ஆம் இலக்க மற்றும் 2024, சனவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரச கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இப்பதவிக்குரிய மாதாந்த திரட்டிய சம்பள அளவத்திட்டமானது ஏஎஸ்-03-A இன் பிரகாரம் ரூபா 50,285.00 - 10×1,335 - 8×1,630 - 17×2,170 - ரூபா 113,565.00 ஆன (மாதாந்த) சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடையது.

04. **வயதெல்லை:**

மட்டுப்படுத்திய ஆட்சேர்ப்பிற்காக வயதெல்லை ஏற்புடையதாகாது.

05. **தேக ஆரோக்கியம் மற்றும் ஏனைய சேவை நிபந்தனைகள்**

சுகாதாரமும் ஒழுக்கமும் – பரீட்சார்த்தி நல்ல உடலாரோக்கியமும் சிறந்த ஒழுக்க பண்பும் உடையவரென்று கணக்காய்வாளர் தலைமை அதிபதி திருப்தியடைதல் வேண்டும். பரீட்சார்த்தி நல்ல தேகாரோக்கியத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** – பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான, தகைமையாக குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையை பரீட்சை விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியளவில் சகல விதத்திலும் வெற்றிகரமாக பூரணப்படுத்தி இருத்தால் மட்டுமே பரீட்சார்த்தி ஒருவர் தகைமை கொண்டவர் எனக் கருதப்படுவார்.

06. **எழுத்துப் பரீட்சை**:

**(i)** இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

**(ii)** பரீட்சைகள் தொடர்பான விபரம் :

பின்வரும் பாடங்களைக் கொண்ட மூன்று (03) வினாத்தாள்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும். ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் வீதம் எழுத்துப் பரீட்சைக்கு மொத்தம் 300 புள்ளிகள் ஆகும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தி பெறுவதற்கான குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு பின்வருமாறு:

விண்ணப்பதாரர்கள் அனைத்து வினாத்தாள்களுக்கும் சமூகமளித்தல் வேண்டும்.

| இலக்கம் | பாடம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தி பெறுவதற்குத் தேவையான குறைந்தபட்ச புள்ளி |
|---|---|---|---|---|
| 01 | கணக்கியல் | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| 02 | கணக்காய்வு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| 03 | வணிகக் கணிதம் | 03 மணித்தியாலம் | 100 | 40% |

**(iii)** பரீட்சைக்கான பாடத்திட்டம்

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| I. கணக்கியல் | கணக்கியல் தத்துவங்கள், உற்பத்தி கணக்குகள், வியாபார கணக்குகள், இலாப நட்டக் கணக்குகள் மற்றும் ஐந்தொகைகள், தொங்கல் கணக்குகளும் பிழைகளைச் சீராக்கல் செய்வதும், ஒற்றைப் பதிவும் பூர்த்தியாக்கப்படாத பதிவுகளும், மொத்தக் கணக்குகள், இருப்பு மதிப்பீடு, கொள்ளல் கொடுத்தல் கணக்குகள், வருமான செலவினக் கணக்குகள், காசு அடிப்படை மற்றும் அட்டுறு அடிப்படை, மூலதன மற்றும் வருமான செலவினங்கள், பெறுமானத் தேய்வு, காலத் தேய்மானம் மற்றும் அருகுதல், பங்குடமை வியாபாரக் கணக்கீடு, ஏற்பாடுகளும் ஒதுக்கீடுகளும், கூட்டு முயற்சிகள், நாணய மாற்று உண்டியல்கள், வரையறுக்கப்பட்ட கம்பனிகள், அரச கூட்டுத்தாபனங்களின் கணக்குகள், ஒப்படைக் கணக்குகள், விற்பனை இன்றேல் திரும்பல் பொருட்கள், கொள்கலன் கணக்குகள், கிளைக் கணக்குகள், திணைக்களக் கணக்குகள், வாடகைக் கொள்வனவுக் கணக்குகள், முதலீட்டுக் கணக்குகள், இறைக் கணக்குகள். |
| II. கணக்காய்வு | கணக்காய்வின் பொதுத் தத்துவங்களும் கோட்பாடுகளும்.<br><br>கணக்காய்வு வகைகள் :- அகக் கணக்காய்வும் புறக்கணக்காய்வும், நியதிச் சட்ட கணக்காய்வும் தனிப்பட்ட கணக்காய்வும், ஐந்தொகைக் கணக்காய்வு, இடைக்காலக் கணக்காய்வும் இறுதிக் கணக்காய்வும், அரச கணக்காய்வும் தனியார் பொறுப்பு முயற்சிகளின் கணக்காய்வும்.<br><br>புற கணக்காய்வாளரின் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களின் வகிபாகம், அவர்களின் தொடர்பு , தனிப்பட்ட பண்புகளும் சுயாதீனமும். |

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| | உள்ளகக் கட்டுப்பாடும் செவ்வையும் :- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு செய்தல் , பதிவிடுதல், தொடக்க மதிப்பீடு, உறுதிப்படுத்தல் மற்றும் இறுதி மதிப்பீடு, பகுப்பாய்வு ரீதியான கணக்காய்வு, அமைப்பு வரைபடங்கள் மற்றும் பாய்ச்சல் விளக்கப்படமும் ஆழ் கணக்காய்வும்<br><br>சான்றுறுதிப்படுத்தல் :- மூலதன மற்றும் வருமான செலவுகளை வகைப்படுத்தல், மாதிரித் தெரிவுக்கான முறைமைகளும் உத்திகளும், மோசடி மற்றும் வழுக்களைக் களைக் கண்டுபிடித்தலும் தடுத்தலும்.<br><br>விற்பனைக் கணக்காய்வு :- வருமதியாளர்களினதும் பெறுவனவுகளினதும் நடைமுறை, கடன் கொள்வனவுகளினதும் கொடுப்பனவுகளினதும் நடைமுறை, சம்பள பட்டியல் நடைமுறை , கிரயமும் பொருட் பதிவேடுகளும், கணக்கு ஏடுகள், இடை நிலை இறுதிக் கணக்குகள்<br><br>சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மெய்மையாய்வு செய்தல். :- நிலையான சொத்துக்களினதும் முதலீடுகளினதும் இருப்புக்களினதும் வருமதியானரினதும் உரொக்கத்தினதும் பொறுப்புக்களினதும் நிகழத்தக்க பொறுப்புக்களினதும் உரிமை, உடமை மற்றும் மதிப்பீடுகள் என்பன.<br><br>வரையறுக்கப்பட்ட கம்பனிகள் :- வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் நியதிச்சட்ட ஏடுகள், பணிப்பாளர்களின் அதிகாரங்களும் கடமைகளும், பகிரக்கூடிய இலாபங்கள் என்பன.<br>அரசாங்க கூட்டுத்தாபனங்கள் :- கணக்காய்வாளரின் நியமனம், ஊதியமும் பதவி நீக்கமும், புதிய கணக்காய்வை ஒப்புக்கொள்ள முன்னருள்ள நடவடிக்கை, கணக்காய்வாளரின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்<br><br>அக மற்றும் புறக் கணக்காய்வுகளின் அமைப்பும் கட்டுப்பாடுகளும், கணக்காய்வு நிகழ்ச்சி நிரல், உள்ளகக் கட்டுப்பாட்டு வினாக்கொத்துக்கள் மற்றும் அட்டவணைகள்<br><br>இயந்திரமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் கணக்காய்வு<br><br>உள்ளக கணக்காய்வு செயற்திறன் கணக்காய்வு, முகாமைக் கணக்காய்வு, தொழிற்பாட்டுக் கணக்காய்வு, முறைமைக் கணக்காய்வு பணப்பெறுமதிக் கணக்காய்வு<br><br>புலனாய்வுகள் |
| III. வணிகக் கணிதம் | தொடர்கள் :- கூட்டல் விருத்தி, ஈறுப்பு மாறியும் சார்பற்ற மாறியும் , கூட்டு வட்டி மற்றும் கழிவிடுதல் சூத்திரமும் அவற்றை கண்டறிதலும்.<br><br>சமன்பாடுகள் :- ஒரு படிச் சமன்பாடுகளும் இருபடிச் சமன்பாடுகளும் அவற்றின் தெரிவு விளக்க வரைபுகளும் உயர்வு, இழிவு புள்ளித் தீர்வுகளில் அவற்றைப் பிரயோகித்தலும்.<br><br>தரவு :- தரவுகளை சேகரித்தலும் ஒழுங்குபடுத்தலும் செம்மைப்படுத்தலும் சரியான வரையறையும் சந்தை ஆராய்ச்சியும் அதற்குரிய தரவுகளை சேகரித்தலும்<br><br>சமர்ப்பித்தல் :- அறிக்கைகளைச் சமர்ப்பித்தலில் புள்ளி விபரங்களைப் பயன்படுத்தலும் புள்ளி விபரத் தகவல்களின் பகுப்பாய்வும் அதனைத் தொழில் நுணுக்கம் அற்ற மொழிகளில் விளக்குதலும் மடக்கை வரைபடங்களுக்குக்குட்பட்ட வரைபடங்களும் வரை வடிவங்களும் |

07. **நேர்முகப் பரீட்சை**

எழுத்துமூல பரீட்சைக்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகளில் கூடிய மொத்த புள்ளிகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகளில் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினால்

தீர்மானிக்கப்படுகின்ற எண்ணிக்கையை கொண்டவர்கள் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். பரீட்சார்த்திகளின் சான்றிதழ்கள்/ சேவை பதிவுகளை பரீட்சிப்பதற்கு மாத்திரமே நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

( தொடர்பு - சேவைப்பிரமாணக் குறிப்பு 7.2.3.3.4)

08. **பரீட்சை நிபந்தனைகள்**

(I) பரீட்சைக் கட்டணம் :-

இப்பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,200 ஆகும். இத் தொகை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமான தலைப்பு 20-03-02-13 இற்கு செலவு வைக்கப்படுவதற்கான அறிவுறுத்தலுடன் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்திற்கு அல்லது அத்தினத்திற்கு முன்னர், தீவில் அமைந்துள்ள ஏதேனும் தபால்/உப தபால் நிலையங்களில் செலுத்தப்பட்டு உங்கள் பெயரில் பெறப்பட்ட பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் பொருத்தமான இடத்தில் ஒட்டப்படல் வேண்டும். இப்பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் முற்றாகவோ அல்லது பகுதியளவிலோ மீளச் செலுத்தப்படமாட்டாது.

(II) விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல்.

(அ) விண்ணப்பமானது இந்த அறிவிப்புடன் இணக்கப்பட்டிருக்கும் மாதிரி படிவத்திற்கு ஏற்ப காகிதத்தின் இருபுறமும் பயன்படுத்தி ஏ4 அளவு தாளில் தயாரிக்கப்பட்டு, விண்ணப்பதாரர் தனது சொந்த கையெழுத்தில் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். 01 முதல் 05 வரையிலான தலைப்புகள் முதல் பக்கத்திலும், 06 முதல் 09 வரையிலான தலைப்புகள் இரண்டாவது பக்கத்திலும் இடம்பெறும் வகையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ) மாதிரி விண்ணப்பத்துடன் இணங்காத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படுமென்பதால் விண்ணப்பத்தை அனுப்ப முன்னர், அது பரீட்சை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துடன் இணங்குகின்றதா என்பதையும், விண்ணப்பத்தில் அனைத்து தகவல்களும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதையும் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா, அதற்கான விவரங்கள் விண்ணப்பத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா, அதற்கான பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதா என்பதையும் மீண்டும் சரிபார்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டின் பிரதியொன்று மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்று எடுத்து வைத்துக் கொள்வதும் உதவிகரமாக இருக்கும்.

(இ) விண்ணப்பங்கள் எந்த மொழியில் பரீட்சை எழுதுவதற்கு தகுதியுடையதோ அந்த மொழியில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்கும் போது, அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழி மூலமான விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூலமான விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்பட வேண்டும்.

(ஈ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 2024.05.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் அமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

(உ) விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில், ''இலங்கை கணக்காய்வு சேவையின் நிறைவேற்று சேவை பிரிவில் கணக்காய்வு அத்தியட்சகர்களை சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை 2023(2024) '' என்ற வசனம் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். இந்தத் திகதிக்கு பிறகு பெறப்படும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஊ) பரீட்சை விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட அனைத்து தகவல்களின் துல்லியத்திற்கும் விண்ணப்பதாரரே பொறுப்பாவார். எல்லா வகையிலும் முழுமையடையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை தபாலில் இடும்போதான இழப்பு அல்லது தாமதம் பற்றிய முறைப்பாடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும், அவர்/அவள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுதலானது அதற்கான சரியான ஏற்றுக்கொள்ளலொன்றாக அமையாது. அத்தகைய அனுமதிக்கப்படுதலானது அடுத்தடுத்த விசாரணைகளுக்கு உட்பட்டது.

(எ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை குறித்து அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் அதனைத் தெரிவிக்கும் செய்தித்தாள் அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிட்டால், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்க வேண்டும். உங்களிடம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் தொடர்பான பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவை கைவசம் இருக்க வேண்டியதுடன் உங்கள் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றை சரியாக குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்திடம் விசாரிக்க வேண்டும். நீங்கள் கொழும்பிற்கு வெளியே உள்ள ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரராக இருந்தால், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்காக உங்கள் தொலைநகல் இலக்கம் மற்றும் மேற்படி விபரங்கள் அடங்கிய கோரிக்கை கடிதமொன்று தொலைநகல் மூலம் இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

(ஏ) பரீட்சை விண்ணப்பத்தில் மற்றும் பரீட்சை அனுமதி அட்டையில் கையொப்பம் சான்றளிக்கப்படுவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட நபரால் , விண்ணப்பதாரரின் கையொப்பம் சான்றளிக்கப்பட வேண்டும்.

09. **பரீட்சைக்கு அனுமதி**

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைத்தோருக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டையொன்று விநியோகிக்கப்படும்.

(ii) பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சாத்தியொருவர் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டியதுடன், அவ்வாறு தோற்றுகின்ற முதலாம் நாளன்றே தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையினை மண்டபத் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது.

(iii) சகல பரீட்சார்த்திகளாலும் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளின் கோவையொன்று இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(iv) பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையொன்று வழங்கப்படுதல், அவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்படுதல் கூடாது.

(v) பரீட்சைகள் நடாத்தப்படுதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதிகளுடன் இணங்கி நடப்பதற்கு பரீட்சார்த்திகள் பணிக்கப்படுகின்றனர். இவ்விதிகளில் எவற்றையும் மீறுகின்ற பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகுவர்.

10. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**

பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்துக்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஆவணமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

I தேசிய ஆளடையாள அட்டை
II செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
III செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்தி ஆள் அடையாளத்தை உறுதி செய்து கொள்ள முடியுமானவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளை மூடாது பரீட்சை மண்டபத்திற்குள் உட்பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆள் அடையாளத்தை உறுதி செய்ய நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உட்படுத்திக் கொள்ள மாட்டார். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை இனங்காண இயலுமானவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளை மூடாது இருக்க வேண்டும்.

11. **தவறான தகவல்களை வழங்குதல்**

பரீட்சாத்தி தகைமையற்றவர் என கண்டறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்கு பின்னர் தேவையான சந்தர்ப்பத்தில் அவருடைய பரீட்சார்த்தி என்ற தன்மை இரத்துச் செய்யப்படும்.

பரீட்சார்த்தியால் வழங்கப்பட்ட விபரங்கள் அவர் அதனை பிழையானவை என தெரிந்து கொண்டே சமர்ப்பித்துள்ளார் ஏன நிரூபிக்கப்பட்டால் இல்லாவிடின் அவர் ஏதும் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்துவிட்டார் எனக் காணப்பட்டால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

12. தேவையான சந்தர்ப்பத்தில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை முறை :-**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்கு தோற்ற வேண்டியது இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமையை பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் மாத்திரமே.

குறிப்பு :

(i) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையின் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

14. **நியமனத்திற்காக தெரிவு செய்யப்படும் நடைமுறை :-**

எழுத்துமூல பரீட்சையில் 03 வினாத்தாள்களுக்காகவும் ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளுக்கு குறையாமல் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆகக் கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுவார்கள். பல பரீட்சார்த்திகள் ஒரே அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பின் தெரிவு செய்வதற்கான இறுதித் தீர்மானம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும்.

15. எழுத்துமூல பரீட்சையில் தகைமைபெற்ற பரீட்சார்த்திகளில், காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையைக் கொண்ட பெறுபேற்றுப் பட்டோலை, செயலாளர், கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும். கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு பெறுபேறுகள் வழங்கப்பட்டதன் பின்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சார்த்திகளிற்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் தபாலின் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

16. பரீட்சார்த்தி தகைமையற்றவர் என கண்டறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்கு பின்னர் தேவையான சந்தர்ப்பத்தில் அவருடைய பரீட்சார்த்தி என்ற தன்மை இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தியால் வழங்கப்பட்ட விபரங்கள் அவர் அதனை பிழையானவை என தெரிந்து கொண்டே சமர்ப்பித்துள்ளார் என நிரூபிக்கப்பட்டால், இல்லாவிடின் அவர் ஏதும் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்துவிட்டார் எனக் காணப்பட்டால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

17. அனைத்து வெற்றிடங்களையும் அல்லது அதில் ஒரு பகுதியினை மாத்திரம் நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்குரிய உரிமை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவுக்குரியதாகும். மேற்படி பிரமாணங்களில் மேவப்படாத விடயங்கள் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் தொடர்பில் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

18. இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளிற்கிடையே எவையேனும் இணக்கமின்மைகள் காணப்பட்டால் சிங்கள அறிவித்தலின் விடயங்களே மேலோங்கும்.

கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி

டீ. கே. விஜேசிங்க,
செயலாளர்.
கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு.

கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு,
இலக்கம்: 35/ஏ, கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை
கொழும்பு- 08
2024, ஏப்பிறல் 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கணக்காய்வு சேவையின் நிறைவேற்று சேவை பிரிவில் கணக்காய்வு அத்தியட்சகர்களை சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2024, (2023)**

**Limited Competitive Examination for Recruitment of Executive Service Category Superintendents of Audit of the Sri Lanka Audit Service – 2024, (2023)**

(அலுவலக பாவனைக்கு மட்டும். )

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்.
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய எண்ணை கூட்டில் குறிப்பிடவும்.)

01. முழுப் பெயர்: ..................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

02. (i) தற்போது கடமையாற்றும் கிளை மற்றும் முகவரி :-.................................................
(முகவரியில் மாற்றம் ஏற்படின் உடனடியாக தெரிவிக்க வேண்டும்)

(ii) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

03. பால் /(பெண் - 1 ஆண் - 0)
(உரிய எண்ணை கூட்டில் குறிப்பிடவும்)

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

05. (i) நீங்கள் தற்போது வகிக்கும் சேவை மற்றும் உரிய தரம், வகுப்பு மற்றும் தொகுதி : ...............

➢ நீங்கள் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தராயின் அச்சேவையின் II ஆம் வகுப்பிற்கு/ I ஆம் வகுப்பிற்கு/விசேட தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :- ---------------------------------

(ii) 2024.05.06 ஆம் திகதி உமது திரட்டப்பட்ட மாதாந்த சம்பளத்தை குறிப்பிடவும்: .........

(iii) நீங்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் (முன்னால் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில்) நியமனம் பெற்ற திகதி மற்றும் 2024.05.06 ஆந் திகதியன்று இத்திணைக்களத்தில் பூரணப்படுத்தி உள்ள தொடர்ச்சியான சேவைக்காலத்தை குறிப்பிடவும். ..................

(iv) நீங்கள் கணக்காய்வுப் பரீட்சகர் சேவைக்கு பிரவேசிப்பதற்கு தகைமை கொண்ட பரீட்சையில் சித்தியெய்திய மொழியை குறிப்பிடவும். ...............

06. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய நம்பிக்கைக்கும் அறிவிக்கும் எட்டியவரை உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டங்கள், விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் இப் பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவன் எனக் காணுமிடத்து இப் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் என்னுடைய பரீட்சார்த்தி தன்மையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன்.

.................................
திகதி : ............................ விண்ணப்பதாரியின் கையொப்பம்

07. பற்றுச்சீட்டு கழறாதவாறு விண்ணப்பத்தில் ஒட்டப்பட வேண்டும். (பற்றுச் சீட்டின் போட்டோ பிரதியை தம்வசம் வைத்திருக்கவும்)

(i) இலக்கம் : …………….…………

(ii) திகதி : ………………………..…..

(iii) கட்டணம் செலுத்திய இடம் : ……………..…………

(iv) செலுத்திய தொகை (ரூபா) : ………………..……….

| |
|---|
| பற்றுச்சீட்டை அதன் ஓரங்களில் கழறாதவாறு இங்கு ஒட்டவும். |

08. **மேற்பார்வை உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு / திருமதி / செல்வி ………………….. எனது முன்னிலையில் இவ் விண்ணப்பத்தில் கைச்சாத்திட்டார் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

…………………………...
மேற்பார்வை உத்தியோகத்தரின் கையொப்பம்

பெயர் : …………………………………………..…………
பதவிப் பெயர் : ……………………………..…………………….
திகதி : ……………………………………………………..

09. **திணைக்கள தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு / திருமதி / செல்வி ………………….. இவ் விண்ணப்பத்தின் 04 (i), (ii), (iii) மற்றும் (iv) ஆம் கட்டங்களில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் இங்கு உள்ள ஆவணங்களுடன் சரியானவை எனவும், உரிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் அவர் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை உடையவர் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

………………………………
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

திகதி : …………………………

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதி திகதியின் பின்னர்,பரீட்சைக்குத் தோற்றுவதற்காக குறிப்பிடப்பட்ட மொழியில் மாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

04-124

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

*அட்டவணை - 2024*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 05.04.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.03.2024 |
| | | புதன் | 10.04.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.03.2024 |
| | | வெள்ளி | 19.04.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.04.2024 |
| | | வெள்ளி | 26.04.2024 | .. | நண்பகல் 12 | புதன் | 10.04.2024 |
| **மே** | .. | வெள்ளி | 03.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.04.2024 |
| | | வெள்ளி | 10.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.04.2024 |
| | | வெள்ளி | 17.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.05.2024 |
| | | புதன் | 22.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.05.2024 |
| | | வெள்ளி | 31.05.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.05.2024 |
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2024 | .. | நண்பகல் 12 | புதன் | 22.05.2024 |
| | | வெள்ளி | 14.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2024 |
| | | வியாழன் | 20.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2024 |
| | | வெள்ளி | 28.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2024 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.